தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

குரங்கர் ஆட்சி!

உரியன செய்யார்; சான்றோர்
உரையுளங் கொள்ளார்; தீய்ந்த
கரிய வன் னெஞ்சர்; மூற்றுக்
களவினிற் காரு வாவில்
நரியைநாய் புணர்ந்து பெற்ற
குரங்கு கள் ளுண்டாற் போலத்
திரியுநர்; உரைப்பர்; மக்கள்
திகைப்புற நாடாள் வோரே!

மடங்கல் (ஆவணி) தி. பி. ஈசுஊசு.

மூ0
50 காசு

தென்மொழி அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்!

நந்தமிழ் பேணும் செந்தமிழன்பீர்!

ஏறத் தாழக் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக மூவா முது மொழியாம் நம் செந்தமிழன்னைக்கும், நாட்டிற்கும், மக்களுக்கும் தென்மொழி ஆற்றி வரும் இடையருத் தொண்டைத் தமிழுலகும் புறவுலகும் நன்கு அறியும். தமிழ் மக்கள் எல்லா நெறி முறைகளானும் உய்தல் வேண்டிப் பகலிரவு பாராது, தனித் தமிழ் பேணி, மெய்த் தொண்டாற்றி வரும் தென்மொழி, நடு நிலை பிறழாத் தன் நேரிய உழைப்பாலும், ஊதியங்கருதா வீறு நடையாலும், இற்றை நாட் போற்றப் பெறும் புல்லியர் தம் கரவு சான்ற உள்ளங்களையும் வினைப்பாடுகளையும் இகழ்ந்து அவை போல் திரிபு நடை போடாத செம்மாந்த போக்காலும், அகப்புறச் சூழ்நிலைகளாலும், தனக்கென்று ஓர் அச்சகத்தை அமைத்துக் கொள்ளக் காலமும் சூழலும் பொருளும் வாய்க்காது துவண்ட நடை போடவேண்டுவ தாயிற்று. இதன் பால் பரிவும் இதன் வளர்ச்சியில் கருத்தும் கொண்டவர்போல் மயக்குற நடித்த போலியர் சிலரும் புல்லியர் சிலரும் நாளடைவில் தென்மொழிக்கே கேடு பயக்கவும் தொடங்கினர். எந்நிலை வாய்ப்பினும் தென் மொழி தான் கொண்ட கொள்கையில் நெகிழ்ச்சியும் தளர்ச் சியுமின்றி மகிழ்ச்சியொடு இது நாள் வரை மொழித் தொண்டாற்றி வருவதை, இதன் பால் மெய்யன்பு கொண்டார் பலரும் நன்கறிவார். அரசினராலும் பிறராலும் தென்மொழி அடையும் தொல்லைகட்கு அளவில்லை. அவற்றை விரைவில் விரிவாக வெளியிடப் பெறும்.

இனியும் தென்மொழி தான் கொண்ட தனிக் கொள்கை போலவே தனக்கென்று ஒரு தனியமைப்பையும் ஏற்படுத் திக் கொள்ளாது காலந் தாழ்த்துமானால், விரைவில் தென் மொழி தன்னையே இழந்து கொள்ள நேரினும் நேரும்.

எனவே தென்மொழி தனக்கென்று ஒரு மூவாண்டுத் திட்டத்தை வகுக்க வேண்டியதாயிற்று. அடுத்த மூவாண்டிற்குள் அது தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அமைத்துக் கொண்ட ஆக்க முறைகள் இவை :

1. தென்மொழி தனக்கென்று ஓர் அச்சகத்தை அமைத்துக் கொள்வது.
2. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழக விடுதலைக்கும் பாடுபடுமாறு சிறந்த செயற் குழு ஒன்றை அமைத்து ஒல்லும் வகையெல்லாம் ஓவாப் பணி செய்வது.
3. மகளிர்க் கென்றும் சிறுவர்க்கென்றும் தனித் தனி இதழ்களைத் தொடங்குவதுடன் நாளிதழ் ஒன்றையும் நடத்து மளவிற்குப் பொருள், துணை, வினை இவற்றைப் பெருக்கிக் கொள்வது.

பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல் — என்னும் பொய்யா மொழிக்கேற்ப, இம் மூன்று திட்டங்களையும் நிறைவேற்றுதற்கு அடிப்படையான பொருளைப் பொது மக்களிடம் நன்கொடையாகப் பெறுவதென்பது விரும்பத் தகாததும், இயலாததுமாகும். எனவே வேறொரு புதுமுறைத் திட்டம் அமைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதுவே இக் கடன் திட்டம். கடன் கொண்டும் நல்லன செய்வதே வேண்டப்படுவது ஆகையால்,

தென்மொழியின் வளர்ச்சியில் நம்பிக்கையும் நாட்டமும் கொண்ட தமிழன்பர் பலரிடமும் தென்மொழி மூவாண்டுக் காலக் கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. மூவாண்டுக் கால முடிவில் அக் கடன் நன்றியுடன் திருப்பித் தரப் பெறும். அதற்கு வட்டியில்லை. கடன் பெற்றதற்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெறும். அச் சான்றிதழ்களைக் கடன் கொடுத்த அன்பர்கள் மூவாண்டுக் கால முடிவில் 1969 - சனவரி முதல் நாளுக்குப் பின் தென்மொழி அலுவலகத்திற்கு அனுப்பிப் பணத்தை முழுமையாகப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் விளக்கங்கள் பின்வருமாறு :

1. இத்திட்டத்திற்குத் 'தென் மொழி அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்' என்றுபெயர்.

2. கடன் பெறும் தொகைகளுக்கான சான்றிதழ்கள் உருபா 10, 100, 500, என்ற மூன்று தொகை வரிசையில் வழங்கப் பெறும்.

3. சான்றிதழ்களில் கடன் தந்தார் பெயரும் முகவரியும் குறிக்கப்பெற்றுப் பெறுப்பாசிரியர் கையெழுத்தும், கடன் பெற்ற நாளும் குறிக்கப் பெற்றிருக்கும்.

4. கடன் சான்றிதழ்கள் 1969—சனவரி முதல் நாளிலும் அதற்குப் பின்னும் மாற்றத் தக்கனவாகும்.

5. கடனுக்கு வட்டியில்லை.

6. பணவிடைகள் வாயிலாகவும் ஆங்காங்குள்ள தென்மொழிப் பொறுப்பாளர்கள் வாயிலாகவும் கடன் பணத்தைக் கொடுத்து அதற்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. ஒவ்வொரு சான்றிதழ்க்கும் போலிகைப் படியொன்று அலுவலகப் பொறுப்பில் இருக்கும்.

8. அலுவலகப் பொறுப்பில் இருக்கும் போலிகைச் சான்றிதழுடன், கடன் கொடுத்தவரின் போலிக் கையொப்பமும் கோப்பில் (File) இருக்கும். கடன் திருப்பித் தரப் பெறுங்கால் இக் கையொப்பங்கள் ஒப்பிட்டுச் சரி பார்க்கப் பெறும்.

9. குறிப்பிட்ட கால முடிவில் சான்றிதழ்களின் பின்புறம் கையெழுத்திட்டு அஞ்சலக வழியிலோ, தென்மொழிப் பொறுப்பாளர் வழியிலோ, சான்றிதழ்களைத் திருப்பித் தந்து கடன் தொகையை முழுமையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

10. சான்றிதழ்கள் வாங்கியவர்கள் எதிர்பாராதநேர்ச்சியால் இறந்துபோக நேரின், அவரின் பிறங்கடையார்(வாரிசு)களுக்கு, அச்சான்றிதழ்களின் மேற் பணம் திருப்பித் தரப்படும்.

11. கால எல்லைக்குள் சான்றிதழ்கள் தொலைந்து போக நேரிட்டால், சான்றிதழ்களுக்கு உரியோர் முன் கூட்டியே அலுவலகத்திற்குச் சான்றிதழ்களின் எண்களையும் பிற விளக்கங்களையும் அறிவித்தால், கடன் தொகை பிறர் கைகளுக்குப் போகா வண்ணம் தக்க ஏற்பாடு செய்யப் பெறும்.

12. சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளாத எந்த வகைத் தொகைக்கும் அலுவலகம் பொறுப்பாகாது.

13. கடன் தொகைகள் யாவும் 1965 திசம்பர் மாதம் 31-ஆம் பக்கலுக்குள் செலுத்தப்பெறல் வேண்டும்.

மேற் கண்ட வகு முறைகளுக்கேற்ப, கடன் தந்தார் தம் முழு முகவரிகளையும் அவர்கள் தந்த தொகைகளுடன் அவ்வப் பொழுது தென்மொழியில் வெளியிடப் பெறும். நூறு உருபாவும் அதற்த மேலும் கடன் கொடுப்பார்க்குத் தொகை திருப்பித் தரப் பெறும் காலத்தில், தென்மொழி அதுவரை வெளியிட்ட நூல்களில் ஒவ்வொரு படி அன்பளிப்பாகத் தரப் பெறும்.

இப் பெரிய அமைப்புத் திட்டத்திற்கு ஆங்காங்குள்ள செல்வர்களும், தமிழன்பர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் உதவி நந்தமிழ் மொழியும் நாடும் மக்களும் மேன் மேலும் சிறப்புற்றிலங்கப் பல்லாற்றானும் துணை நிற்க, வாய்மையும் தூய்மையும் கொண்ட தமிழ்நெஞ்சுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இன்றே உங்கள் பணியினைத் தொடங்குக. பொருள்வளம் கொண்டவர்களும் அருளுளம் கொண்டவர்களும் ஒருங்கிணைந்து உதவ வேண்டுகின்றோம்.

அன்பன்

பெருஞ்சித்திரன்.

தென்மொழி, கடலூர்--1.

தி. பி. ஃஃஃஃஃ மடங்கல். க.

[17—8—65]

(பி. கு :- இவ்வறிக்கையை அச்சிடுவதற்குள் இதழ் முழுமையடைந்துவிட்டதால் தனியே இணைத்துள்ளோம். இஃது அடுத்த மாத இதழோடு சேர்ந்தும் அச்சிடப்பெறும் - ஆசிரியர்.)

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | ஆவணி தி. பி. 1936 (1965-ஆகச்டு) | ஓலை 7.

பேச்சுரிமையும் எழுத்துரிமையும்

பேச்சுரிமையும், எழுத்துரிமையும் தனிப்பட்ட ஒரு வல்லரசு நாட்டில் வேண்டுமானால் தடை செய்யப் படலாம். ஆனால் மக்களின் ஒப்போலை (வாக்கு)களைப் பெற்று அமைக்கப்பெறும் ஒரு குடியரசு நாட்டில் தடைசெய்யப் படுவதென்பது தற்கொலைக்கு ஒப்பாகும். ஒருமுறை ஒப்போலைகளைப் போட்டுவிட்ட மக்கள் ஓர் ஐந்தாண்டுக் காலத்திற்கு, அதாவது அடுத்த தேர்தல் வரும் வரை வாயையும் எழுதுகோலையும் மூடி வைத்துக் கொண்டுதான் இருத்தல் வேண்டுமென்பது, வல்லாண்மை படைத்த நெஞ்சழுத்தக் காரர்களின் ஏமாற்று உரையாகும். செய்தித் தாள்களின் உரிமைகள் பறிக்கப்பெறுவதே ஓர் அரசியல் அமைப்பு அல்லது ஒரு கட்சி விரைவில் அழிந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அடையாளமாகும். தங்களுடைய போக்குகளை மக்கள் எப்படிச் சரியாகவோ தவறுகவோ புரிந்து கொள்ளுகின்றார்கள் என்று அரசினர் அறிந்துகொள்ளுவதற்குச் செய்தித்தாள்களே அளவுகோள்கள் எனலாம். பொய்யும் பரபரப்பும் வாய்ந்த செய்திகளை மட்டும் வெளியிடுவதாலோ, அன்றி அரசினர்க்கு எதிர்ப்பான உண்மைகளை மட்டுமே மக்களிடம் பரப்புவதாலோ, அச் செய்தித்தாள்கள் ஏத (அபாயகர)மானவை ஆகிவிடா. பொய்யான செய்திகள் உண்மையான அரசியல் அமைப்பை ஒரு பொழு

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்,
உரிமை, வெளியீடு : தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-1.

தும் கெடுத்துவிட முடியாது. அதே போல் உண்மையான செய்திகள் பொய்யான அரசியல் அமைப்பை எக்காலத்தும் மக்கள் அமைப்பில் வேரூன்றும்படி விட்டுவிடா. தங்கள் குற்றங்களையும் குறைகளையும் அப்பட்டமாக ஒளிவு மறைவின்றி வெளியிடுகின்றார்களே என்று மனம் புழுங்கித்திரியும் அமைச்சர்கள், ஒரு பொழுதும் மக்கள் நலன்களைப்பற்றி எண்ணுவதில்லை. அவர்கள் கருத்துச் செலுத்துவதெல்லாம் தங்களின் தவறான மறைவான நடத்தைகள் எப்படியும் மக்களின் காதுகளுக்கு எட்டிவிடக்கூடாதென்பதுதான். இத்தகைய இக்கட்டான நிலையில் மக்களுக்குக் கைகாட்டியாகவும் உரைகல்லாகவும் இருப்பது தாளாசிரியனின் கையில் உள்ள தூவல்(பேனா)தான். அந்தத் தாளாசிரியனின் வாய்க்கும் கைக்கும் விலங்கிடுவது குடியரசு நாட்டில் நடக்கக் கூடாத--வேண்டாத நிகழ்ச்சியாகும்.

நம் நாட்டில் உள்ள அரசியல் தலைவர்களிடமும், செய்தித் தாள்களிடமும் நாம் அனுப்பிவைக்கும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருப்பதுபோலவே உண்மையும் வலிவும் குறைவுதான். ஆனால் அரசியல் என்பதை என்னவென்றே அறியாத, அல்லது வெறும் வாய்ப்பந்தல் என்றே உணராத நம் பொது மக்களைப்போல அவ்வளவு அறிவு மழுக்கம் உடையவர்களல்லர் அவர்கள். நம் பொதுமக்களை ஏமாற்றும் விரகை இவர்கள் கப்பலேறிப் போய்கூடக் கற்றுவந்து வைத்துள்ளனர். இந்நிலை பற்றித்தான் நம் கட்சித் தலைவர்களின் பேச்சும், நம் தாளிகைகளின் போக்கும் ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப் படுகின்றன. ஆனால் புறக்கணிப்பு வேறு அடக்குமுறை வேறு. மாறுபாடானவற்றைப் புறக்கணிக்கலாம். ஆனால் ஊறுபாடானவற்றை அடக்கியல்லவோ ஆளல் வேண்டும்" என்று சிலர் கூறலாம். ஊறுபாடு என்பது என்ன? அது மாறுபாட்டின் மேல் கட்டப்படும் கட்டிடம், மக்களின் மாறுபாடான கருத்துகளுக்குச் செவிசாய்க்காத எந்த அரசும் அவர்களின் ஊறுபாட்டிற்கு உட்பட்டே ஆகல் வேண்டும். ஊறுபாடுவரும் அளவிற்கு அரசு குருடாகவும் செவிடாகவும் இருந்து கொண்டு மக்களின் மாறுபாடான கருத்துகளுக்கு மதிப்பளியாதிருக்குமானால், அதனால் வரும் விளைவுகளுக்கு அந்த அரசே முழுப் பொறுப்பு ஆகுமேயன்றி மக்கள் பொறுப்பாளர் ஆகார். இதற்குத் தக்க சான்று நான்கைந்து மாதங்களுக்கு முன் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டமே.

கொடுக்கப்பட்ட பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும் மக்கள் பயன்படுத்திக் கொள்ளாததே தவறுமன்றி, அப் பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும் அரசுக்கு மாறுகப் பயன்படுத்துவதுகூட என்றுமே தவறாகாது. குடியரசு நாட்டில் கருத்துப் பரிமாற்றத்திற்குத்தான் முதலிடம் தரப்படல் வேண்டும். சட்டங்கள் ஆயிரமுறை திருத்தப்படலாம். அவற்றை அப்படியே

விட்டுவைக்க வேண்டுமென்பதுதான் தவறுகும். ஒரு நாட்டில் அரசியல் அமைப்புச் சட்டம் ஒருமுறை கூடத் திருத்தப்பெற வில்லை என்றால், அங்குள்ள மக்கள் அந்நாட்டு அரசியல் அமைப் பில் போதிய கவனம் செலுத்தவில்லை யென்றே பொருளாகும். மக்கள் தங்களுக்காக எப்படி ஆளும் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுக்கின்ற உரிமையைப் பெறுகின்றனரோ, அப்படியே தங்கள் நலம்பேணுத சட்ட திட்டங்களை மாற்ற வேண்டும் என்ற குரலெ முப்பவும் உரிமை பெறுகின்றனர். எழுப்பப்படும் இவ்வுரிமைக் குரலைப் பிடித்து அமுக்குவது அமைக்கப்படும் புதிய அரசியல் அமைப்பையும் குமுகாய மலர்ச்சியையும் வளரவிடாது தடுப்பதா கும். எந்த ஒரு நாட்டில் இத்தகைய அடக்கு முறைகள் வலி வடைகின்றனவோ அந்த நாட்டு அரசியல் அமைப்பு சிதைக்கப் படுமென்பதற்கு அதுவே முன்னறிவிப்பாகும்.

பெரும்பான்மையும் வளர்ச்சியுறுத ஒரு நாட்டில் எழுப்பப் படும் சிறுசிறு கூக்குரலும் மிகவும் கவனிக்கப் பட வேண்டி யதே. ஒற்றுமையாக இருங்கள் என்று கூறி அரசியலமைதியை ஏற்படுத்தி விடுவதற்காக அரசியல் மன்றத்திற்கு இவர்கள் உறுப்பினர்களை அனுப்பவில்லை. குற்றம்சாட்டுபவனையும் சாட் டப் பட்டவனையும் அழைத்து ஒற்றுமையாகப் போய்விடுங்கள் என்று ஒரு வழக்கு மன்ற நடுவர் கூறுவாரானால், அறமன்றங் களும், சட்டங்களும் வேண்டுவதில்லை. 'ஒற்றுமையாகப் போய் விடுங்கள்' என்ற வேண்டுகோளிற்குப் பின் குற்றவாளிகள் தப் பித்தும் கொள்ளலாம். குற்றமற்றவர்கள் ஏமாற்றவும் படலாம். அரசியல் காரணங்களுக்காக மட்டும் ஒரு நாட்டு மக்களை ஒற்று மைப் படுத்திவிட முடியாது. அவர்தம் உள்ளார்ந்த வேட்கைகள் அனைத்தும் அவ்வரசியல் காரணங்களுக்காகப் புதைக்கப்பட வேண்டியவையல்ல. ஒற்றுமை என்பது இரண்டு உள்ளங்களுக் கிடையிலும் முகிழ்த்துக் கிளைத்து வளர்ந்து இணைய வேண்டிய ஒன்று. மூன்றாமவன் ஒருவன் (அவன் அரசனாக இருப்பினும் சரியே) வந்து சமப்படுத்த வேண்டிய ஒன்று அன்று. அப்படி ஒரு தேவையோ நிலையோ வந்தாலும் அந்த இரண்டு உள்ளங்களும் தாம் ஒற்றுமையாக இருக்கவேண்டிய அடிப்படைக் காரணத் தைத் தாமே விரும்பி ஒப்புக் கொண்டாலொழிய, எந்தவகை யான மூன்றாந்தரமான அமைவும் பயன்படாது. இந்நிலையில் அடக்குமுறையைக் கையாளுவது அம்மூன்றாமவனுக்குத்தான் தீங்கு விளைவிக்குமே யன்றி வேறொரு பயனையும் விளைவிக்காது.

இன்று வளரும் குழந்தைகளில் எந்தக் குழந்தை நாளைக்கு இந்த நாட்டின் அமைச்சனாக வரும் என்பதை எப்படி இன்றைக் குக் கூறமுடியாதோ, அப்படியே இன்று கூறப் பெறும் கருத்துக் களில் எது நாளைக்குச் சரியென்று மக்களால் ஒப்புக் கொள்ளப் பெறும் என்பதையும் கணித்துக் கூறமுடியாது. முக்காலக் கணிப்பு (தீர்க்க தரிசனம்) ஆகப் பல்லாயிரமாண்டுகட்கு முன்பு

சொல்லப்பட்ட கருத்துகளில், மக்கள் உள்ளத்தின் ஆழங்களில் புதையுண்டு மின்னிக் கொண்டிருந்த கருத்துகளோடு பொருந்தியவை தவிர மீதியனைத்தும் கால வெள்ளத்தில் கரைந்தே போயின. எனவே கருத்துகளுக்குத் தடைவிதிப்பவன் பெரும் மூடனே! அல்லது அரசியல் கொள்ளைக்காரனே!

இன்றைய அரசியலில் ஆளுநரின் போக்கு அத்தகைய அடிபிடிக் கொள்ளையே யாகும். இவரின் கருத்தழிக்கும் செய்கை வாயையும் கையையும் கட்டிப் போட்டு விட்டு உரிமைக்கு மன்றாடும் ஒருத்தியைக் கற்பழிக்கும் செய்கையே ஆகும். மெய்ப்பு (அச்சுப் பிழை)களைத் திருத்தும் தாளாசிரியர்கள்போல், இவ்வாட்சியாளர்கள் அமையாமல், அச்சுக் கோப்பவர்களின் கைகளையே கட்டிப்போடும் மடமை வாய்ந்ததாகும் இவர்களின் செய்கை. கடந்த இந்தியெதிர்ப்புத் தன்மானப் போருக்குப் பின் இவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு தாளாசிரியர்களையும் அச்சகத்தார்களையும் மிரட்டிவருவதும் அடக்கியொடுக்குவதும் இவர்தம் ஆட்சிக்கே இறுதிநிலையை வருவித்துக் கொள்வதாகும். மூடன் தன் பிணக்குழியைத் தானே தோண்டிக் கொள்வதுமன்றி அதில் விழுந்தும் இறப்பபோல், அரசினர் தம் இறுதி நாடகத்தை ஆடத் தொடங்கி விட்டனர். கருத்தூற்றை அடைக்காமல் தாளிகை மதகை அடைப்பதால் ஒருவகைப் பயனும் விளையாது. கருத்தூற்று இவர்களால் அடைக்கப்படும் தன்மையதன்று. என்றைக்காவது மதகை உடைத்துக் கொண்டு மக்கள் வெள்ளம் பாயத்தான் பாயும். அக்கால் இவர்கள் உழுது விதைத்ததால் நாற்றுவிட்டு வளர்ந்திருக்கும் சில நல்ல பயிர் வகைகளும் கூட அவ்வெள்ளத்தால் அழிக்கப் பெறும்.

நாடு ஒரே ஒருவரின் நல்லெண்ணத்தால் மட்டும் உருவாக்கப் பெறுவதன்று. மக்கள் எல்லாரின் நல்லெண்ணங்களாலும் ஒருமிக்க உருவாக்கப் பெறும் ஓர் உயர்ந்த அமைப்பாகும்; தனிச் சிற்பி ஒருவனால் நாட்டு அமைப்பு என்ற படிமம் செய்யப் பெற்றாலும் அவ்வக்காலத்தே தோன்றும் பலராலும் அது செப்பம் பெற வேண்டியதாகும். அதனால் மக்களிடம் எழும் எல்லா நல்ல கருத்துகளும் மதிக்கப் பெறல் வேண்டும். அதுவே குடியரசின் அடிப்படைக் கருத்தாகும். தாளாசிரியர்களின் மேலும், அவர்தம் நெஞ்சங்களின் மீதும் விழுகின்ற அடி அல்லது திரை, குடியரசு மாளிகையில் விழுகின்ற இடியாகும்; அல்லது கறையாகும். போலி அரசியல் தலைவர்கள் சிலராலும், பணவெறியும், அதிகார வெறியும் பிடித்த கயவர்கள் சிலராலும் உருவாக்கப் பெற்ற இவ்வடக்கு முறைச் சட்டம் வங்காளக் குடாக் கடலில் தூக்கி யெறியப்பட வேண்டிய ஒன்றாகும். இது தூக்கி எறியப்படாதவரை இந்நாட்டில் நல்லதோர் அரசியல் அமைப்பு ஏற்பட வழியில்லைக் ஆட்சி மாளிகைகளின் காலியிடங்களை உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் நெஞ்சழுத்தக்காரர் ஒரு சிலரின் கைப்பிடி.

பாட்டு சு. மொழிபேண்கூத்து, ம. இலெ. தங்கப்பா பாடியது.

கட்டுளை யிட்ட கருமட் சுடுகலம்
நற்றலை மறைப்ப மாட்டி உருக்காந்து
கரியினும் சுண்ணத்தும் செம்மட் குழைவினும்
வரியும் புள்ளியும் மயங்கத் தீட்டி
ஆந்தைக் கடுங்கண் அகல எழுதிக்
கோடுயர் மூக்கொடு பேழ்வாய் வரைந்து
துயல்வரு நாவொடு சுரைக்காழ் பல்லாத்
தூரிகை மீசையாத் துடைப்பம் முறுக்கிப்
பொய்த்துட் புழைஇய ; புன்மயிர் மார்பொடு
வைத்தூ றமுக்கிய வயிறு பிதுங்கத்
தைத்திடை இறுக்கிய தாழ்வரிக் கச்சின்
எருக்க ஒண்பூ இலைபுணர் அணியல்
செருப்பின் கோப்பொடு மார்பிடை அலங்க
இளிவெண் மண்டையும் என்பும் கையுற
உட்குவரு தோற்றத் தொருகை ஓங்கிச்
சாறயர் மூதூர் ஆலியின் அசைஇப்
பேரொலிச் சுற்றம் சூழ்ந்துநான் மருங்கும்
பழிக்குநர் போலும் இழிக்குநர் போலும்
ஒழிக்குநர் போலும் உறுசினம் காட்ட
நடிப்பின் நடுங்கியும் இடிப்பின் ஒடுங்கியும்
தடுக்குநர் இல்வழித் தலைநிமிர்ந் தாடியும்
புடைநெரி மாக்கள் வியப்பநின் ரூர்த்துத்
தலைநகர் நீள்தெரு நெடுவலம் வருகுநர்
உதுக்காண் தோழி,எங் காத லோரே !
சிறுபுன் திணிமொழி கடிந்து செந்தமிழ்
மொழிபேண் கூத்தின் ஆடுநர் அவரே !
தீங்கினர் சூழ்ச்சியின் தெற்கெழும் குறுமொழி
வேங்கடம் புறத்தா வெருட்டிய பின்பே
போந்தெமை வரையும் பூட்கை யோரே !

(இந்தி கடிந்தெழுந்த ஊர்வலத்தில், தன் தலைவன் ''இந்திப் பூத'' உருக்கொண்டு ஆடிய ஞான்று, தலைவி நகைபெற உவந்து கூறியது.)

பாட்டு எ. நோக்குயர் நெஞ்சம்,

மகிபை. பாவிசைக்கோ பாடியது.

நெருநல் நினைந்திலை ; பிற்றை மலைந்திலை ;
பெருநோக் குயர்ந்த நெஞ்சங் கவன்றிலை ;
" குரைகழல் வயவர் அயில்வலம் நிறீஇய
வரைவில் சீர்த்தி நிறைதமிழ் " நலங்கெட
முதிரா மொழிஞர் அதிரப் புக்கெனக்
கடுவிசை சுரப்பக் கடுகினை மன்னே !
செந்தமிழ் தழீஇய நின்னிள வுயிரை,
புண்வேட் டுண்ணும் மந்தி அன்னேன்,
வன்கோல் பற்றி ஆளுநன் நிறுத்த
வல்வேட் டெஃகம் வௌவிய ஞான்றும்
கொல்படை விதிர்க்க 'வெல்'கென் ருர்த்து
மாயா உணர்வொடு சாய்ந்த பூட்கைப்
பனிநீர்த் தண்ணியை நீயே
நினைதொறும் எம்முட் கனலா கினையே !

(அண்ணமல நகர்க்கண் இந்திமுனிந் தெழுந்து, வேட்டெஃகம் தாக்கி வீழ்ந்துபட்ட இளவல் அரசேந்திரனைப் பாடியது.)

பாட்டு அ. வட்கார் மொழிதெறல்.

ம. இலெ. தங்கப்பா பாடியது.

கையே, புன்மொழி கரிபூசின
சுனைநீலம் மலர்வ போன்றன.
காலே, நெடுநடையின் புழுதிதோய்ந்தன
சாந்துபுலர் தூண் போன்றன.
கண்ணே, கொதிப்புற்றுச் சிவப்பேறின
ஒள்ளெரிக் கொழுந்து போன்றன.
குரலே, பகை கடிந்தும் தமிழ் வாழ்த்தியும்
இடையரு முழங்குதலான்
உருமேற்றின் ஒலிபோன்றன.
தோளே, உயிர்த் தீந்தமிழ் பகைமேற் செலக்
கொடிதாங்கிய தோற்றத்தான்

முகில் தவழ்ந்தொளிர் குன்று போன்றன.
அவரே, நெய்பாறிய கலிகுஞ்சியர்
வெயர் வொழுகி நனைவாடையர்
கங்குல் பகல் கண்பாடிலர்.
நீரும் காணு நாவின ராயினும்
உட்குவரு துப்பின் அடல்வேங் கையரே !
வட்கார் மொழிதெற எழுந்தனர் மன்ற !
இனியவர்த் தப்புநர் எவரே
வன்பால் மெய்ச்சினம் கீண்டி யோரே !

(ஏற்புடைத் தில்லா இந்தியை எதிர்க்கப் போர்ப்படை வகுத்து, இந்திப் பெயர் அழித்தும், செந்தீக் கொளுவியும் எந்தமிழ் காக்கப் போராடிய இளைஞர் தம் திறம்வியந்தது.)

பாட்டு கூ. புதுப்புனற் கதழ்வு. துரை. மாணிக்கம் பாடியது.

எவர்கொல் அவர்க்கே முனிவாற் றும்மே !
அரைசாள் இழிசின் புரைசூழ் நெஞ்சினன் ;
பறைவாய் தெறிக்கும் பத்த வச்சலன்
பெயரா விருக்கை நினைவிற் றப்பி
வடவர்ப் பணியும் மூடவெள் ளறிவின்
இட்டபோக்கிற் கிடருக் காவலர்
சுட்டுக் கிடத்திய செந்தமிழ்ச் சிருஅன்
வளங்கூர் நாவின் இளங்கோ
மருந்தகத் துளைந்துயிர் துறப்பப் புடைந்து
கற்பத் தூக்கிய சுவடி வீசி
வெற்புத் தோளில் விறலேற்றித்
தெறுவிழியில் தீயேற்றிச்
செந்நாவிற் செற்றத்தார்
உண்ணுவி அறக்கழல
ஒருசூலிற் பன்னூருப்
புற்றீயற் புறப்பாட்டின்
கதிர்கொன்ற களமென்ன
எதிர்நின்ற மரம்வீழ்த்தி

ஓச்சுமுகத் தடக்கையின்
காசிதர்க்கும் களிறன்ன
மலையெரிவாய் பீர்ந்தன்ன
உலைநெஞ்சின் வெளியேறிப்
புதுப்புனலின் கதழ்போகிக்
கொதிப்புறு நறுநெய் யாக
விதிர்ப்புறப் படைப்புல மெதிர்ந்த ஞான்றே!

(அண்ணுமலை நகரத்துத் தமிழ்காக்கத் துஞ்சிய அரசேந்திரனெடு குண்டடிபட்டு மருந்தகத் துயிர்துறந்த இளங்கோவனைப் பாடியது.)



பாட்டு 60. உயவல் யானை: துரை. மாணிக்கம் பாடியது.

இவனியா ரென்குவி ராயி னிவனே
தாறலை பாகர் தந்துயர் பொருஅது
ளுறுதக நினைக்கும் உயவல் யானை
கையுகத் தறைந்து கால்தலை நெறிக்கு
மெய்யே போலும் பொய்சேர் கொற்றம்
வழங்குமொழி உலப்ப இலங்கில் வறுமொழி
பாரிப் புடன்று தூறப் புக்க
கொலைகோற் காவலர் குறிகொள் எஃகம்
அதிரப் படர்ந்தா ராக
எதிர்தலைப் பட்ட எம்மான் மகனே!

(அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவன் இளங்கோ மருந்தகத்துத் துஞ்சினானாக, அவனை யாரென விளித்தார்க்கு நற்றாய் சொல்லியது.)



ஆங்கிலர் விட்டுச் சென்ற எச்சங்கள்...!

அன்புள்ள ஆசிரியர்க்கு, வணக்கம்,

தஞ்சை மாவட்டம், மன்னை வட்டம், கோட்டூர் உயர்பள்ளித் தலைமையாசிரியர் அரங்கபதி என்னும் பார்ப்பனர். அரங்கசாமி என்ற பார்ப்பனரும் ஒரு துணையாசிரியர். (பயிற்சி பெறுதவர்) பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு மாணவர்களை, வருகைப் பதிவு செய்யும் பொழுது "உளேன் ஐயா" என்று சொல்லக் கூடாது. 'பிரசன்ட் சார்' என்றுதான் சொல்லல் வேண்டும் என்றும், இல்லாவிட்டால் 'நான் இனி உங்கள் வகுப்பிற்கு வர மாட்டேன்' என்றும் கூறி இரண்டு கிழமைவரை வகுப்பிற்கு வரவேயில்லை. வகுப்புத் தலைவன் தலைமையாசிரியர்பால் சென்று "தமிழாசிரியர்" தவிர வேறு ஒரு ஆசிரியரும் எங்கள் வகுப்பிற்கு வருவதில்லை என்றான். அவர், "உங்கள் விருப்பத்திற்குப் பாடம் நடத்துவதா, ஆசிரியர் விருப்பப்படியா? 'உளேன் ஐயா' என்றால் ஒழித்துக்கட்டிச் சீட்டைக் கிழித்துவிடுவேன்" என்றும் அச்சுறுத்துகிறார். மாணவர் உதவித்தொகை விண்ணப்பத்தில் கையொப்பம் பெறச்சென்றால் நீ 'உளேன் ஐயா' கோட்(ஷ்)டியா? 'பிரசன்ட் சார்' கோட்(ஷ்)டியா? என்று கேட்டுக் கையொப்பமிட மறுக்கிறார். தாழ்த்தப் பட்ட மாணவர்களை இழித்துப் பேசுகிறார், அவர் வழிபற்றி நடனசிகாமணி என்ற பயிற்சியற்ற ஆசிரியரும், சேதுராமலிங்கம் என்ற இடைநிலை ஆசிரியரும், மாணவர்களை 'உளேன் ஐயா' என்று கூறக் கூடாது; 'பிரசென்ட் சார்' என்றுதான் சொல்லல் வேண்டும் என்று அச்சுறுத்துகின்றனர். விடலன் வழியினர் போலும். பள்ளியில் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில்தான் நடை பெறுகின்றன. தமிழில் நாள் கும்பலகையில் எழுதினால் புரிய வில்லையென்று அழிக்கச் சொல்கின்றனர். பள்ளியில் இரு கட்சிகள் உருவாக்குகிறார்கள். தமிழ் நாட்டில் தமிழின் நிலை இவ்வாறுளது. அரசு தமிழை வளர்ப்பதாக வாய்ப்பறையறைகிறது? என் செய்வல்?

அன்பன்,

வி. பொ. பழனிவேலன்

நான்காம் பக்கத் தொடர்ச்சி

குள் இவ்வரசியல் சட்டம் சிக்கிச் சிதறுண்டு போகாமல் காப்பாற்ற வேண்டியது அங்குள்ள ஒரிரு நல்ல தலைவர்களின் தலையாய கடமையாகும். மூட நம்பிக்கை அறிவுள்ள எதிரி வரவேற்கப்பட வேண்டியவன். எதிர்க்கட்சிக் காரர்கள் எல்லாருமே எதிரிகளல்லர். ஆளுங்கட்சிக்காரர்கள் எல்லாருமே நம்பத் தகுந்த நண்பர்களுமல்லர். அங்கு உண்மையான அரசியல் தலைவர்களை வாழ்த்திவரவேற்கும் நண்பர்களுமுளர். இங்கு அவர்களை வீழ்த்திப் புதைக்க எண்ணும் பகைவர்களும் உளர். நடுநிலையோடு நாம் அரசினர்க்குச் சொல்வது இதுதான்!—பெருஞ்சித்திரன்

அவர் நினைவாக

குடும்பத்தோடு புறப்படு!

—பாவேந்தர் பாரதிதாசன்;

வீட்டைப் பூட்டிக் குடும்பத் தோடு
நாட்டை மீட்க இன்றே ஓடு!
காட்டியதாம் கைவரிசை தில்லி!—அதன்
சீட்டுக் கிழிந்து போனதென்று சொல்லி! (வீட்)

ஆட்டுவாராம்! அடக்குவாராம்!
அழிப்பாராம்! ஒழிப்பாராம்!
ஓட்டுவாராம்; நம்மை அவ் வடக்கர்—மேலும்
தீட்டுவாராம் கத்தியை அவ் விடக்கர்! (வீட்)

வெற்றி பெற்றால் மீள்வ தென்று
வீழ்ச்சி யுற்றால் சாவ தென்று
நற்றமிழன் னைக்குறுதி கூறு—அட,
நாம்தமிழர்! நாம்தமிழர்!! ஏறு! (வீட்)

செந்தமிழைக் கொல்லச் சொல்லி,
சீரகத்தை அழிக்கச் சொல்லி,
இந்தியினைக் கற்கச் சொல்லிச் சொல்லி—ஒரு
மந்தியாட்டம் ஆடியதாம் தில்லி! (வீட்)

தாய்க்கரிசி இல்லை என்பார்;
தமிழர்க்கெலாம் தொல்லை என்பார்;
வாய்க்கரிசி போட்டுக்கொண்டு முந்து—நல்ல
போர்ப்பரிசு நீபெற நினைந்து! (வீட்)

புலவ, வித்துவ ஒண். கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி. டி.பி.ஓ.எல்.

அறநெறி நூல்கள், பொருளியல் நூல்கள், இன்பத்துறை நூல்கள், சமயச்சார்புடைய நூல்கள், பற்பல கலையியல் பற்றிய வோத்துகள். இன்னபிறவற்றின்பொருட்டிறங்களை நன்கோர்ந்து, அறிவு நூனடை, உலகியனடைகளை வழுவறநாடி, அவையவற்றுள்நல்லனவாய்ப் பொதுமைப் பெற்றியின் நிற்பனவற்றை நவையறத்தேர்ந்து,

> "இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்குஞ்
> செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
> வீடவற்றி னுன்கின் விதிவழங்க"

> "இன்பமுந் துன்பமு மென்னு மிவையிண்ரடும்
> மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா(து)
> உள்ளி யுணர"

நூலுரைக்கப் புகுவராயின் அவர் தாம் நுவலும் பொருள்வகைகளை வாய்ப்ப நினைந்து,

> "இத்திறத்தா னிதனெடு நிகர்ப்பென நிறுத்தலும்,
> ஒன்றனை யோதுழிப் பிறிதுடன் புணர்த்தலும்,
> ஒருபொருண் மேலதா பலபொருள் மடுத்தலும்,
> இனம்படுஉ மவற்றுள் இறந்தது காட்டலும்,
> இதனினிஃ தினிதெனத் தீதெனத் தெருட்டலும்,
> விளைவறி வுறுத்து விலக்கென விளம்பலும்,
> இனையரை யிவற்ரு னறிகெனத் தெரித்தலும்,
> அழியலை யோர்கென வழுங்க லகற்றலும்,
> அறிவிய லுலகிய லறிறப நாடி
> யோம்புக வொழிக வொழியற்க வோர்கென
> நெறியி னுளங்கொள நிரல்பட நாட்டலும்,
> இனைய திறத்தின் ஏற்புடைப் பலவும்
> முடிய நாடி முறைமையின் மொழிதலும்"

வேண்டுமன்றே! இத்திறப்பட்டன வெல்லாம் முப்பாலாகிய நூலகத்துக் கவினுற நிற்றலைக் கண்டே,

> "அறமுத னுன்கு மகலிடத்தோ ரெல்லாம்
> திறமுறத்தேர்ந்து தெளியக்—குறள் வெண்பாப்
> பன்னிய வள்ளுவர் பான்முறைநே ரொவ்வாதே
> முன்னை முதுவோர் மொழி"

என்று கோவூர் கிழார் புகழ்வாராயினரென்ப.

முப்பாலின் நாற்பால்

"அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயனன்றே" ஆகவே வள்ளுவனுரை முப்பாலினுற்பான் மொழிந்தவரென்று கிரந்தையாரும் "பெறலரிய நாலுமொழிந்த பெருநாவலரென்று தொடித்தலை விழுத்தண்டினாரும். "அறம் பொருளின்பம்

விடென்னு நான்கின் திறந்தெரிந்து செப்பியதேவு'' என்று மாமூலனாரும் புகலுவாராயினர். ஆயினும். அறம்பொருளின்பம் என்னும் மூன்று பகுதியுடைமை பற்றியன்றே முப்பாலென்னும் பெயரெய்துவதாயிற்று. அதுபற்றியன்றே

''அறநான்கு ; அறிபொருளேழு ; ஒன்றுகாமத்
திறமூன் றெனப் பகுதிசெய்து''

தொடித்தலை விழுத்தண்டினார்,

என்றும்,

''அறந்தகளி யான்ற பொருள்திரி; யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றித் தண்டு—குறும்பாவா
வள்ளுவனு ரேற்றினர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு''

நப்பாலத்தனார்.

என்றும் சான்றோர்கள் சாற்றினராகுப.

மேலும், அறநான்கு என்பதனை எறிச்சலூர் மாடலனார்

''பாயிரம் நான்கு ; இல்லறம் இருபான் ; பன்முன்றே
தூயதுறவறம் ; ஒன்றுஊழாக—வாய
அறத்துப்பால் நால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து''

என்று விளக்கிப் போந்தார். அறிபொருளேழென்பதனைப் போக்கி யாரென்னும் புலவர்,

''அரசியல் ஐயைந்து ; அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரண் இரண்டு ; ஒன்று ஒண்கூழ் ; இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் ; குடிபதின்மூன்று
எண்பொரு ளேழா மிவை''

என்று புகன்றார்.

ஒன்று காமத்திறம் மூன்று'' என்பதனை மோசிகீரனார் என்பார்.

''ஆண்பால்ஏழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்தன்பு
பூண்பால் இருபால் ஓராருக—மாண்பாய
காமத்தின் பக்கம்ஒரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நான்கு''

என்றுங் கூறினர், மேலும், காமத்துப்பால் களவு கற்பென்று இரண்டாய்ப் பகுப்புண்டு நிற்பதனை நுண்பொருண்மாலை யென்னும் நூல்,

''புணர்தல் பிரிதல் பொருள்களவு கற்பென்(று)
உணரும் இருகூறும்; உரைக்கிற்
புணருங்களவு ஏழ்; அறுமூன்றுகற்பு; இவை ஐயைந்தா
அளவுறு காமத்துப்பா லாம்'' —என்று

குறிப்பிடுகின்றது. இத்துணையும் கூறியவற்றுள்.

"அறமுப்பத்தெட்டுப்; பொருளெழுபது; இன்பத்
திறம் இருபத்தைந்தாற் றெளிய—முறைமையால்"

(மதுரைப் பெருமருதனர்

வள்ளுவனர் ஒதினரென்பதேவலியுறுதலின், வீட்டினை யாண்டோ தினரென்பார்க்கு ஒருசாரார் முற்பாற்பொருள்களோடு வீடு மாகிய நாற்பொருள்களது நெறிகளும் வழங்க வள்ளுவனர் பாடினரென்ப.

"———மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனர்
பாடினரின்குறள்வெண் பா"

என்று இறிகட் பெருங்கண்ணனர் கூறியதனைக் காட்டுப,

இனியொருசாரார் கூறுவதாவது: பிற நூலாசிரியர்க்கெல் லாம் அறிந்து சொல்லுதற்கு எட்டாதிருந்த அற முதலியவற் றினுட்பங்களையவர் கூறியவாற்றானே அறிந்தேம். அவர் ஆங்காங்கு இம்மை மறுமை வீடுகளைக் குறித்து உணர்த்திய வற்றானே வீட்டுத்திறனைத் தெளிந்தேமென்பார். அதற்கு,

"அறனறிந்தேம், ஆன்றபொருளறிந்தேம்; இன்பின்
திறனறிந்தேம், வீடு தெளிந்தேம்"

என்னும் கொடிஞாழன்மாணிபூதனர் கூற்றைக் கரியாகக் காட்டுப.
பிரிதொருசாரார்,

"வீடொன்று பாயிரநான்கு; விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்று; ஒன்றாழ்;—கூடுபொருள்
எள்ளில் எழுபது இருபதிற றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை"

என்று சிறுமேதாவியார் கூறியதனைத் தழீஇநின்று, பாயிரம் நான்கனுள் வீட்டு நெறியைப் பற்றி யோதியுளாரென்ப. அவரறியார்; பாயிரமாவது நூன்முகத்துரைக்கப்படுவதாகலின் அறத்துப்பால் முதலிய மூன்றற்கும் புறத்துள்ளதென்பார் வீடொன்று என்றதன்றி வீட்டு நெறியை யுணர்த்துவதென்று கருதிக் கூறினரன்றெனக. அன்றியும், வீடென்பது அதற்கு நிமித்த காரணமாகிய கடவுளை யாகுபெயரானுணர்த்திற்றாகக் கொண்டு "கடவுள் வாழ்த்து" என்பதனை முதலாகக்கொண்ட பாயிரமென்று கோடலுமையும். மேலும்,

"ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்
பாயிரத்தினெடு பகர்ந்ததின்பின்" —நத்தனர்

என்புழி வீடொன்றுமாறுபற்றியே, பாயிரத்தைப் பிரித்தோதினு ரென்னுமோ ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும் பாயிரத்

தது வகை நான்கதிகாரமும் கூடிய வழியே எண்ணல் நிரம்புவதன்றிப் பாயிரத்தை வரைந்தோதியவாறுமோ! அற்றாயின், அவ்வாறு உணர்ச்சி கவர்பட்டு நிற்குமாறு கழறியதெற்றுக்கெனின்: "ஆயிரமுகத்தானகன்ற தாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்னும் நூனெறியைக் காத்தொழுகி நூல் செய்த அருமையைப் புலப்படுத்தற்கென்க. இவற்றுள், பாயிரமும், நூலும், நால்வகை நூற்பயனுமுண்டாக வள்ளுவனார் நூல் செய்தாரென்பது அறிவுறுத்தப்பட்டதாம்.

"ஐயாறுநூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தான்" (காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்)

என்பது ஈங்கண் கூறிய வகையெல்லாங்கூடி நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களான் முடிந்து நிற்பதனையே வலியுறுத்து மாறறிதும். இனி மற்றொருசாரார், இல்லறத்தின் வழுவாதொழுகி யறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார். உலக மாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டுக் கொள்கைகளைக் காத்துநின்றுழி பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபுகளானன்றியுண்மையா னுணரும் நிலையுண்டாமன்றே அந்நிலைக்கண் வீட்டிற்கு நிமித்த காரணமாகிய செவ்விய பொருளை யதனைடொற்றுமையுற இடை விடாது துயர நினைத்து நிலைத்து நின்ற அப்பெற்றியே வீடடைவராகுபவாதலின், வள்ளுவனார் துறவறப் பகுதி யான் வீட்டு நெறியைக் குறிப்பிற் புலப்படக் கூறினரென்ப. "பிறப்பினும் செல்வமுமீனும்" என்று வள்ளுவனார்கூறியது இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் அறம்ம பயத்தல் சிறப் புடைத்தாமென்பதனை வலியுறுத்தற்கே யாமென்றும், "அறவாழி யந்தணன்" என்று கூறியதூஉம் அறத்தது சிறப்பால் வீட்டு நெறியை நல்கும் அந்தணனைச் சாருதல் கைகூடுமென்பதனைக் குறிக்கொள்ள வைத்தாற்கேயாமென்றுங் கூறுட.

"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்" (அவாவறுத்தல்: 10)

என்றதனுன் பேராவியற்கைத்தாகிய வீடு துறவறத்தின் பயனுதல் புலப்படுமாறும் காட்டுப. இதற்கு,
"நன்று ஞானங் கடந்துபோய் நல்லிந் திரியமெல் லாநீத்து
ஒன்றுக் கிடந்த வரும்பெரும்பா ழூலப்பி யதனை யுணர்ந்
துணர்ந்து
சென்றுங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே"
என்பதனைக் காட்டித் தங்கருத்தினையே வலியுறுத்துவராவர்,

அறம் நான்கு

இனிப் பாயிரமும், இல்லறமும், துறவறமும், ஊழும் அறத்துப்பாலி னுட்பிரிவுகளாகத் தொடித்தலை விழுத்தண்டினர் கொண்டார். சிறுமேதாவியார் என்பார் பாயிரமானது அறத்துப் பாலினுளடங்காது அதனைவிட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்குமென்னுங் கருத்துடையராய் " வீடொன்று பாயிரநான்கு " என்று நவின்றார். இனியொருசாரார் இல்லறத்துறவறங்களுக்கே அறன் வலியுறுத்தல் புறவுரையாய் நிற்பதாகுமென்றும், கடவுள் வாழ்த்து முதலாகிய மூன்றும் நூற்கெல்லாம் பொதுவா மென்றும் கருதுப. இவ்வாறு ஒரு பாலுக்குப் புறவுரையாயும் மூப்பாலுக்கும் புறவுரையாயும் உரியவைதாம் பாயிரத்தினுள் இடம்பெற்று, ஏற்ற அதிகார அடைவினிற்குமென்ப. ஆகவே, பாயிரம் நான்கு என்றவளவே அமைவர். அறத்துப்பாலுக்குப் பாயிரமாவதும், நூற்கெல்லாம் பாயிரமாவதும் இவையென்று வரையறுப்பான் புகின் கருத்து வேறுபாடு விளையுமென்று அங்ஙனம் அமைவர் என்க. இனித் தொடித்தலை விழுத்தண்டினர் கருத்து வழிநிற்பார் கூறுமாறு : கடவுள் வாழ்த்தினுள் கடவுளை " அறவாழியந்தணன் " என்று அறத்தொடு சார்த்திக்கூறினமை யானும், வான்சிறப்பினுள்

" தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் "

என்றதனுள் பெரும்பான்மைபற்றி யில்லறத்தின் மேற்றாகிய ஈகையையும், துறவறத்தின் மேனிற்கும் தவத்தையுங் குறித்தமை யின் அறத்திற்கு வானம் இன்றியமையாமை போதருதலானும், அறமுதற் பொருள்களை யுலகிற்குள்ளவாறுணர்த்த வல்லார் நீத்தாரேயாதலானும், கடவுள் வாழ்த்தும் வான்சிறப்பும் நீத்தார் பெருமையும் அறன்வலியுறுத்திற்கு உறுப்புகளாய் அறத்துப் பாலுக்கேயுரிய பாயிரப் பகுதிகளாமென்ப. இவ்வாறே பொரு ளின்பங்களுக்கு ஊழின்வலியை முதற் காரணமாகக்கொண்டு இதனையவ்விருவகைப் பால்களுக்கும் பொதுவாகக் கொள்ளு வாரும், அறத்திற்கும் பொருளுக்குமே பொதுவாகக் கொள்ளு வாரும், அறத்திற்கே யிறுதியுரையாகக் கொள்ளுவாருமாய்ப் பல திறத்தாசிரியருளர். இதனையிடம் பெற்றுழி விளக்குதும், இத் துணையுங் கூறியவற்றுன் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரம் அறத்துப்பாலுக்கேயுரிய புறவுரையாமோ, அன்றி முப்பாலுக் கும் பொதுவாய் நிற்கும் பாயிரப் பகுதியாமோ, என்று ஐயுற நிற்பதாயிற்று. இனி வலிமை முதலிய பண்புகளான் மூன்றிய வுறுதிப்பொருட்கு அவற்றுன் மூவராகிய முதற் கடவுளரோடு இயைபுண்டாகலான், அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க என்ற

வுரைக் கூற்றையுடன்படுவார் கடவுள் வாழ்த்து என்னுமதிகாரம் நூற்கெல்லாம் பொதுவெனக் கொள்ளுப. அவ்வாறு கொள்ளுங்கால் அதிகார முறைமை நோக்கி அறன்வலியுறுத்தலையும் பொதுப் பாயிரப்பகுதியதாகவே கொள்ளுவர். அங்ஙனமாயின் "வீடொன்று பாயிரம்" என்னும் சிறுமேதாவியார் கருத்தே சிறக்கு மாற்றிதும், அதனுன் நூலகத்துக்கண் வெவ்வேறிடங்களில் விளம்பப்பட்டுள்ள கருத்துகள் நூன்முகத்து நிற்கும் அதிகாரப் பொருண்மையோடு இயைபுபற்றுதல் பொதுவாகப் பெறுதுமாகலின் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்திற்கும் இஃதொக்கும். இவ்வமைதியை யறியப்புகுதும்.

அறனெனப் பொதுப்படக் கூறியதனுன், இல்லறத்தாராகிய மக்கட்கும், மன்னர்க்கும், அமைச்சர்க்கும் பிறவாய நிலையினுர்க்குமே யன்றித் துறவுக்கண்புக்கு நோற்பார்க்கும் ஒக்கும். அதுபற்றியே, நூன்முகத்துக்கண் மூப்பாலுக்கும் பயன்பட்டு நிற்குமாறு பகர்ந்தாராதல் வேண்டும். "சிறந்தது பயிற்றல் இறந்ததன் கடனே" என்ற சொற்றெடர் இவ்விருவகையினர்க்கும் பொருந்துமாறு நிற்றல் தொல்காப்பியவுரைக் கூற்றுல் உணரக்கிடக்கின்றது.

—(தொடரும்)

பக்கங்கள் குறைந்ததேன்?

தென்மொழியின் செம்மாந்த நடையைத் தடுத்துவிடும் நோக்கோடு 'தமிழ்ப் பகைவர்'களும், அவர்தம் அடிதாங்கிகளான' புறக்கணிப்பாளர்'களும் செய்துவரும் கெடுப்புகள் பலவாயினும் 'தமிழ் நலங்காவா' அரசினர் விலக்கும் இடர்கள் கடந்த சிலமாதங்களில் பல்லாற்ருனும் மிகுந்துவிட்டன. இவ்வாருன அகப்புறத் தொல்லைகளுக்கிடையே உரியகாலத்தில் இதழை வெளியிட வேண்டிய கட்டாய நிலையில் இம்மாதம் குறைந்த பக்கங்களே அச்சேறின. அரசினரின் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் மேன்மேலும் தொடரத் தமிழ் மக்கள் இடந்தருவார்களையானுல் தென்மொழியை நிறுத்திவிடவும் நேரிடும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம். தமிழுரிமை காத்தற்கும், மெய்யறிவு கொளுத்தற்கும் தென்மொழியினும் வலிய, கூரிய கருவியொன்றில்லை என்பதை நன்குணர்ந்துள்ள தமிழ் மக்கள் எண்ணிச் செய்வார்களாக.

— அமைச்சர்.

SIRUPANATRUPPADAI

ம. இலெ. தங்கப்பா

Not only that, (but there are other bounteous men)
There's **Pegan**, ruler of the rocky land
Descend ant of the hunters' tribe with awe some might
He gave away his cloak to the wood peacock
On the slopes of the gertile rainy hills.
There's **Pari**, lord of **Parambu**
The slopes of which are full of gleaming water falls.
He gave away his chariot grand
To the tiny-blossomed **Mullai** plant
That grew beside the avenue of **Naga** trees
With fragrant flowers producing honey for the bees.
And **Kari's** there, braceleted and bangled,
With a fear some lance that glitters with fire
He made a gift to supplicants
Of horses with the sounding bells
And, to the wonder of all, his Kingdom, too
With kind, good words. Then comes **Aai**
Of warm, pleasing talk. His shoulders rubbed
With sandal-paste do bear the bow. With joy he gave
A shining garment blue that came from the Naga land
To the god that sat beneath the banyan tree
And **Athigan** with an army like the roaring seas
And with a spear long which sparkles bright
With a dreaded flame of anger.
To Avvai great he gave to eat
The sweet nectarean fruit of the **Nelli** tree
That grew so fine 'mong scented flowers
On the slope of the lofty hill.
Then there's **Nelli** ruler of the mountains broad
With ceaseless rain, the cool winds sleeping on the cliffs
He gave for enjoyment of his friends
Their daily needs, without a limit
His hands in battle fields excelling too!
And **Ori** with an **Ori** (chestnut) horse who fought

தருக்கவியல் [LOGIC]

ஒப்பாய்வு [ANALOGY]

நாஞ்சில். செ. சுந்தரராசன்.

விளங்கியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) ஆகிய அறிவியற்றுறை ஆய்வாளர்கள், ஆய்வுச்சாலைகளில் (Laboratory) ஆய்வுகள் மூலம் தங்கள் கொள்கைகளை (Theory) விளக்கி நிலைநிறுத்துகின்றனர். ஆயின் குமுகாயவியல் (Sociology), பொருளியல் (Economics), மெய்யறிவியல் (Philosophy) ஆகிய துறைகளில் ஆய்வாளர்கள் தங்களின் கொள்கைகளை ஆய்வுச்சாலைகளில் விளக்க இயலாது. "ஒப்பாய்வு" இவர்களுக்குத் தக்கதொரு கருவியாகப் பயன்படுகிறது. ஒப்பாய்வு பற்றிச் சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இரு பொருட்களோ, இருசெய்கைகளோ ஒன்றுபட்ட குணங்களுடையனவாயிருந்தால் அவற்றை "ஒத்த பொருட்கள்" அல்லது "ஒத்த செய்கைகள்"—பொதுவாக 'ஒத்தவை' (Analogous Things)—என்று சொல்லுகிறோம். சான்றாக, சாக்கிரட்டீசு (Socratese) குடும்பத் தலைவனுக்கும், படைத்தலைவனுக்கும் கீழ்க்கண்ட ஒற்றுமைகள் இருப்பதாகக் கூறினர்.

1. தமக்குக் கீழே இருப்பவர்கள் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்வது இரு தலைவர்கட்கும் பொது.

2. வெவ்வேறு பொறுப்புகளை ஏற்க ஆட்களை அமர்த்துவது இருவருடைய கடமைகளும் ஆகும்.

3. தவறு செய்பவர்களைக் கண்டிப்பதும், நல்லவர்களைப் பாராட்டுவதும் இருவருக்கும் பொது.

4. தங்களுக்குக் கீழ் இருப்பவர்களைத் தங்களிடம் நல்லெண்ணத்தோடிருக்கும்வகையில் நடத்துவது இருவருக்கும் பெருமை தரும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

Kari with a **Kari** (jet black) horse
He had given the low-hilled country **to** the players
Where the maturing **Naga** trees unfold their fragrant buds.
But **Nalliakodan** far surpasses all
And for the good of the noble sea-girt world,
Sigle-handed, the yoke of charity he bears
Which the afore said givers seven
Whith their war-winning, sturdy arms had borne.
Together, such a strength and hardi hood has he. ○

5. இருவருக்குமே, கூட்டாளிகள் அல்லது துணையாளர்களைச் சேர்த்துக் கொள்வது ஊதியமளிக்கும்.

6. எதிரிகளை விஞ்சுவது இருவருக்கும் நல்லது.

மேற்கண்ட ஒற்றுமைகள் இருப்பதால் குடும்பத் தலைவனும், படைத்தலைவனும் ஒத்தவர்கள். ஆதலின், குடும்பம் நடத்தத் தெரிந்தவன், படையையும் திறம்பட நடத்துவான் என நைகொமகைடீசு (Nicomokidese) என்பானிடம் தருக்கமிட்டார். இச்சான்று எவ்வாறு ஒப்பாய்வு தம்கொள்கைகளை நிலைநிறுத்தப் பயன்படுகிறது என்பதை விளக்குகிறது. இன்றும்கூட அரசியல் தலைவர்கள் மேடைகளில் ஒப்பாய்வு மூலம் தங்களது கொள்கைகளை நிலைநிறுத்த முயற்சி செய்வதைக் காணலாம்.

புதிதான ஒன்றை நாம் காண்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அஃது என்னவென்று நமக்குத் தெரியாது. நமது மூளை "இதைப் போன்ற பண்புடைய ஒன்றை இதற்குமுன் நாம் கண்டதுண்டா?" என எண்ணத் தொடங்குகிறது. நம் மூளையில் இருக்கும் நமக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்றுடன், இப் புதியதையும் இணைத்துப் பார்த்து, புதிதானதைப் பற்றி விளக்கம் கூறுகிறது. இதுதான் ஒப்பாய்வு. நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ நமது அன்றாட வாழ்க்கையில் நாம் இதனைப் பயன்படுத்துகிறோம். சான்றாக, சிற்றூர்க்காரர்கள் ஒருநாள் வானில் இதுவரை கேட்டிராத ஒலியொன்றைக் கேட்டனர். "என்ன?" என ஆராய்கின்றனர். "இதுபோன்ற ஒலியை உந்து ஒன்று சாலையில் செல்லும் பொழுது கேட்டிருப்பது" நினைவிற்கு வருகிறது. அதனோடு இதனையும் இணைத்துப் பார்த்து, இவ்வொலி வானில் செல்லும் வானூர்தியால் ஏற்பட்டது என முடிவு செய்கின்றனர்.

மற்றொருவகை எண்ணத்திற்கும் ஒப்பாய்வு பயன்படுகின்றது. "இரு பொருட்கள் பலவகைகளில் ஒரேதன்மையுடையனவாயிருக்குமாயின், எல்லாப் பண்புகளுமே அவற்றுக்கு பொதுவானதாயிருக்கும்" என்பதே இதன் மூலக் கொள்கை.

"அ", "இ" என இரு பொருட்களுள்ளன. "அ" வானது "க", "ச", "த" ஆகிய குணங்களுடையது. "இ" யானது "க" "ச" ஆகிய குணங்களுடையது. எனவே "இ"யானது "த" எனும் குணமுடையதாயிருக்கும். இதனை "நிலவுலகம்—செவ்வாய்" ஒப்பாய்வின் மூலம் காணலாம்.

உலகமும், செவ்வாயும் கதிரவனை வலம் வருகின்றன. உலகிலும், செவ்வாயிலும் மலைகளுள்ளன.

உலகம், செவ்வாய் இவற்றைச்சூழ வளி மண்டலம் உள்ளது.

உலகில் உயிரினங்கள் வாழ்கின்றன.

செவ்வாயிலும் உயிரினங்கள் வாழ்தல் வேண்டும்.

ஒப்பாய்வு கீழ்க்காணும் முறைகட்கு (Rules) உட்பட வேண்டும். அன்றில் அவை ''பிழையுடையன'' (Fallacy) எனக் கொள்ளப்படும்.

கொள்கை-க.

ஒப்பிடப்படுபவையில் காணப்படும் பண்புகள் ஒன்றோடொன்று செயல் தன்மையில் இணைக்கப்பட்டனவாயிருத்தல் வேண்டும்.*

குழந்தை யொன்றுக்குத் தாய் கற்கண்டு கொடுக்கிறாள். அது வெண்ணிறப் படிகமாய், கல் போன்றிருக்கிறது. அது சுவைக்க இனிப்பாயிருக்கிறது.

அடுத்தநாள் குழந்தை சீனக்காரத்தைக் (Alum) காண்கிறது. அதுவும் வெண்ணிறப் படிகமாய் கல்போன்றிருக்கிறது. அதுவும் இனிப்பாயிருக்குமென்றெண்ணிச் சுவைக்கிறது.

இதில் ''வெண்ணிறப் படிகமாய் கல்போன்றிருத்தல்'' ''இனிப்பாயிருத்தல்'' ஆகிய பண்புகள் செயல் தன்மையில் இணைக்கப்பட்டன அல்ல. அதாவது 'வெண்ணிறப் படிகமாய் கல்போன்றிருப்பவை' யெல்லாம் 'இனிப்பாயிருத்தல்' வேண்டுமென்பதில்லை, ஆதலின் இவ்வொப்பாய்வு பிழையுடைத்து. (Fallacious Analogy).

இப்''பிழை''யை, நாம் இவ்வொப்பாய்வை ''தருக்க வடிவில் (Syllogism) எழுதுவதன் மூலம் எளிதில் காணலாம்.

கற்கண்டு வெண்ணிறப் படிகமாய் கல் போன்றுள்ளது. அஃது இனிப்பாகவும் இருக்கிறது.

சீனக்காரம் வெண்ணிறப் படிகமாய் கல்போன்றுள்ளது. எனவே சீனக்காரம் இனிப்பாயிருக்கும்.

இவ்வுண்மையை இரண்டாகப் பகுத்து எழுதுவோம்.

---

* Qualities must be essentially Connected.

1. கற்கண்டு வெண்ணிறப் படிகமாய் கல்போன்றுள்ளது. கற்கண்டு இனிப்பாயிருக்கிறது. எனவே "வெண்ணிறப் படிகமாய் கல்போன்றிருப்பவை"யெல்லாம் இனிப்பாயிருக்கும்,

2. முதல் நிலையின் முடிவை (Conclusion) பயன்படுத்தி, "வெண்ணிறப்படிகமாய் கல்போன்றிருப்பவை"யெல்லாம் இனிப்பாயிருக்கும்.

சீனுக்காரம் வெண்ணிறப் படிகமாய் கல் போன்றிருக்கிறது. எனவே சீனுக்காரம் இனிப்பாயிருக்கும்.

இவ்விரண்டில் முதல் வாதம் தருக்கவியல் முறைகளின்படி பிழையுடைத்து.*

இரண்டாம் நிலை தருக்கவியல் முறைகட்குட்பட்டதேயாயினும், பிழையான முதலாம் கொள்கையின் முடிவை இதில் பயன்படுத்தியிருப்பதால், "சீனுக்காரம் இனிப்பாயிருக்கும்" என்ற இரண்டாம் கொள்கையின் முடிவு பிழையுடைத்தேயாம்.

இரு பொருட்களுக்கிடையே பல்வேறு ஒற்றுமைகளிருப்பினும், அப்பண்புகள் செயல் தன்மையில் இணைக்கப்படாதனவாயிருப்பின் அவற்றை ஒத்தனவெனக் கொள்ளலாகாது. இதனையே பர். பொசான்கே (Dr. Bosanquet) "ஒப்பாய்வில் நாம் பண்டு ஒற்றுமைகளின் எண்ணிக்கையைக்கணக்கிடுவதில்லை. அவற்றின் தன்மைகளையே கணக்கிடுகிறோம்" எனக் கூறினர்.

கொள்கை–உ.

இரு பொருட்களுக்கிடையே பல்வேறு ஒற்றுமைகளிருப்பினும், அவற்றிடையே ஒரு சில வேற்றுமைகளிருப்பின் அவற்றை நாம் மறந்துவிடலாகாது.

இதனை நாம் "திமிங்கிலம்—சுறு மீன்" ஒப்பாய்வின் மூலம் காணலாம்,

திமிங்கலமும். சுறுமீனும் நீரில் வாழ்கின்றன. இரண்டும் உருவ அமைப்பில் ஒத்திருக்கின்றன. இரண்டும் பிற சிறிய மீன்களை உணவாகக் கொள்கின்றன.

---

* It Commits the "Fallacy of Illicit Minor." [இதன் விளக்கம் இக்கட்டுரையின் நோக்கிற்கு அப்பாற்பட்டது.]

சுறுமீன் நீரிலிருந்து தியதையை (Oxygen)உட்கொள்ளுகிறது.

எனவே திமிங்கிலமும் நீரிலிருந்து தியதையையே உட்கொள்ளுகிறது.

இவ்வாய்வின் முடிவு பிழையுடைத்து. ஏனெனில் நாம் திமிங்கிலத்திற்கும். சுறுமீனுக்கும் இடையேயுள்ள ஒருவேற்றுமையைக் கணக்கிலெடுக்கவில்லை.

சுறுமீன் செதிள்களின் (Gills) உதவியால் காற்றை உட்கொள்ளுகின்றது. ஆனல், திமிங்கலம் செதில்களின் உதவியின்றி உயிர்க்கின்றது.

கொள்கை-ங.

ஒப்பிடும் இரு பொருட்களையும் பற்றிய முழு விளக்கமும் நமக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். முழுவிளக்கமும் தெரியாது ஒப்பிட்டால். அவ்வொப்பாய்வு பிழையுடையதாகவும் ஆகலாம்.

சான்றுக. ''நிலம்—செவ்வாய்'' ஒப்பாய்வில், நாம் செவ்வாயைப் பற்றி முழு விளக்கமும் அறியோம். ஆதலின், ''செவ்வாயில் உயிரினங்கள் வாழ்கின்றன'' என்ற முடிவு பிழையுடையதாயிருப்பினும் இருக்கலாம்.

இவற்றை யெல்லாம் ஒன்றுதிரட்டி, பண்டாரகர். சிவஞயகம் ''சரியான ஒப்பாய்வுக்கு, ஒப்பிடப்படுபவை முகாமையான வேற்றுமைகள் எதுவுமின்றி அடிப்படையான, கற்பனையற்ற உண்மையான பொதுப்பண்புகள் பல உடையனவாயிருத்தல் வேண்டும்''* எனக் கூறினர்.

ஒப்பாய்வில் நாம் ஓர் உண்மையினின்று மற்றொன்றுக்குத் தாவுகிறோம். (Particular to Particular). ஆதலின், மேற்கூறிய எல்லா முறைகட்குமுட்பட்டதாயினுங்கூட, அவ்வொப்பாய்வின் முடிவு 'முற்றிலும் சரியானதே'' எனக் கூறுதல் இயலாது.

ஆய்வுத்துறையில் மட்டுமன்றி, மாணவர்கட்குப் பாடம் பயிற்றுவிக்கவும் ஒப்பாய்வு பயன்படுகின்றது. நமக்குத்தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றுடன் ஒப்பிடுப் பயில்விப்பது, மாணவர்கட்கு எளிதில் விளக்கமளிக்கும். சான்றுக,

---

* Valid analogies should have points of resemblence which are basic, real not imaginary and numberous with no crucial differaence.

'THE THEORY AND PRACTICE OF EDUCATION'

ஆசிரியரொருவர் உந்து வானூர்தி (Jet Plane) செயல்படு வதை விளக்குமாற்றுன், தண்ணீரில் மிதக்கும் பலகை யொன்றில் உட்கார்ந்திருக்கும் தவளை முன்னேக்கி குதிக்கும்பொழுது, பலகை யானது பின்னேக்கிக் தள்ளப்படுவதைக் காண்கிறோம். இது போல, உந்து வானூர்தியின் பின் பக்கம் வழி அழுத்தமுள்ள வளி பீச்சப்படும்பொழுது, வானூர்தியானது எதிர்த் திசையில்—அதா வது முன்னே-உந்தித் தள்ளப்படுகிறது" எனக் கூறுகிறார்

ஒப்பாய்வும், உவமையும் ஒன்றென்ற தவருன கருத்து பல ரிடையே நிலவி வருகின்றது. 'ஒருபுடையொத்து பலபுடையொவ் வாத' இரு பொருட்களிடையே தோன்றும் ஒப்புமையை உவமை யானது வெளிக்காட்டுகிறது. ஆனல் ஒப்பாய்வு, பலவாற்றுனும் ஒன்றுபட்டு, முக்கியமான வேற்றுமைகளற்ற, இரு பொருட் களையே ஒப்பிடுகிறது. சான்றுக,

இயேசு "ஊசியின் காதினுள் ஒட்டகம் நுழைவதற்கு, செல் வனின் துறக்க (சொர்க்க) நுழைவை" ஒப்பிட்டார். ஒட்டகம் ஊசியின் காதினுள் நுழைவதும், செல்வன் துறக்க வீட்டை அடைவதும் ஆண்டவனுலன்றி இயலாதவை என்பது தவிர 'ஒட் டகம்—செல்வன்' 'ஊசியின் காது—துறக்கம்' இவற்றுக்குப் பொதுவான பண்பு ஒன்றும் இல்லை. ஆதலின் இஃது ஒப்பாய் வன்று. உவமையேயாகும்.

ஒப்பாய்வு 'குமுகாயவியல்', பொருளியல்' போன்ற துறைக ளில் மட்டுமின்றி, பொறியியல் (Engineering) போன்ற கணிதத் தொடர்பான (Mathematical) துறைகளிலும் ஆய்வாளர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளது கட்டிடவியல் (Civil Engineering) துறையின் முக்கிய பகுதியான "கோப்பியல் மெய்ப்பாட்டில்" (Thlory of Structures) 'தூண் ஒப்பாய்வு' (Column Analogy) 'கூரைக்கை ஒப்பாய்வு' (Beam Analogy) முதலியன சிக்கலான பல கட்டிடக் கோப்புகளின் ஆய்வுகளை (Analysis of Struetures) எளிதாக்கியுள்ளன. 'மண்ணியலில்' (Soil Mechanics) 'மண்ணில் நீரின் கசிவை' (Seepage of water through soil) கண்டறிய 'மின் ஒப்பாய்வு' (Electrical Analogy) பயன்படுகிறது.

ஒப்பாய்வு 'மெய்ப்பாட்டியல்', 'அறிவியல்' 'பொறியியல்' ஆகிய துறைகளில் மிக்க பயன் விளைத்திருப்பினும்கூட, ஒப்பாய் வின் மூலம் கிடைக்கும் முடிவு "முற்றிலும் சரியே" எனக் கூற வியலாது, என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஒப்பாய்வின் முடிவை ஒரு வழிகாட்டியாகவே கொள்ளல் வேண்டும். அது காட்டும் திசையில் மேலும் ஆய்ந்து சரியான முடிவைக் காண லாம் என்பது மில் (Mill) என்னும் அறிஞரின் கூற்று.

வளிச் சுழலி [GAS TURBINE]

—இல. முனிவேலு

தோற்றுவாய்: அணு உலகில் வாழும் நாம் எதையும் குறுகிய கால அளவில், தெற்றென சிறந்த முறையில், வெற்றிகரமாகச் செயல்படுத்த விழைகிறோம்! அறிவியல் அறிஞர்களும் அதற்கேற்பச் சாதனங்களை அமைத்துச் செயல்படுத்திக் காட்டுகின்றனர். அறிவியலின் புதிய படைப்புகள் காரணமாக ஞாலத்தில் இரண்டு இடங்களுக்கும் இடையில் உள்ள தொலைவு குறைந்து நாட்டுக்கு நாடு உறவின்நெருக்கம் பின்னிப்பிணைந்துள்ளது எனில் மிகையன்று!

தேவை: பல இயந்திரங்களை வெகுவாக இயக்க மிகுந்த எந்திரத் திறன் (Mechanical Efficiency) தேவைப்பட்டதால், கடந்த காலத்தில் அறிவியலறிஞர்கள் நீராவிச் சுழலிகளைக் (Steam Turbines) கண்டுபிடித்துப் புதிய முறையில் அமைத்தனர். வளரும் அறிவியல் அணுத்துறையில், அதன் எந்திரத்திறன் 26 விழுக்காடு ஆக இருப்பதால் எந்திரங்களை வெகு விரைவாக இயக்க முடிவதில்லை. உயர் வெப்ப (Great Temprature) த்தினை அடையவும், மிகுந்த திறனைப் பெறவும், அறிஞர்கள் பாடுபட்டு அயராது ஆய்வுநடத்தி 'வளிச் சுழலி' (Gas Turbine) யினை அமைத்தனர்.

பெரும்பாலும் எந்திரத்திறன் சுழற்சி இயக்க (Rotary Motion) உருவில் தேவைப்படுகிறது. இத்திறனை வளிச் சுழலி மூலம் பெறலாம். எரி பொருளி (Fuel) லிருந்து வெப்பத்திறனைப் பெற்று, அதை அழுத்த ஆற்றலாக (Pressure Energy) மாற்றி, அதிலிருந்து நேரடியாக சுழற்சி இயக்கத்தைப் பெறலாம். இற்றை நாளில் சுழலி யந்திரங்கள் (Turbines) போக்கு வரவுக்கு மிகவும் பயன்படுத்தப்படுகின்றன. இன்று வானவெளிப் பயணம். அதாவது வானூர்தி (Aeroplane) போக்குவரத்து, அண்டை விட்டுக்குச் சென்று வருவதுபோல குறுகிய காலத்தில் அமைகிறது எனில்–அதற்கு வளிச் சுழலியே இன்றியமையாப் பகுதியாகும்.

பொதுவாக எந்திரங்களைக் கொண்டு வானூர்தி ஏறத்தாழ பத்து கற்கள்வரை விண்ணிலே பறக்கலாம். ஆனால் அதற்கும் உயரமாகச் சென்றால், வளியின் உராய்வினால் வெப்பம் மிகுதியாகின்றது, வெப்ப நிலை உயர உயர எந்திரத்திறன் குறைகிறது. குறைவுக்கு நிறைவு செய்ய வளிச் சுழலி பயன்படுகிறது!

இருபதாம் நூற்றாண்டில் ஏவப்படும் ஏவு கணைகள் (Rockets) செயற்கைக் கோள்கள் (Sputniks). செயற்கைத் துணைக் கோள்கள், 'ரேஞ்சர்கள்' 'புரபெல்லர்' கோளெய்திகள் (Propeller Planes), 'செட்' ஊர்திகள் (Jetplane) ஆகிய அனைத்திலும்வளிச் சுழலிகளே நிறைந்து காணப்படுகின்றன.

அமைப்பு: இதன் 'கனற்சி' (Combustion) நிகழ்ச்சி உள் எரி எந்திர (Internal Combustion Engines) த்துடன் ஒன்றுபோல்

இருந்தாலும் ஆற்றலைத் தோற்றுவிப்பதில் நீராவிச் சுழலி போன்றுள்ளது. விண் வெளியிலுள்ள காற்று தொகுக்கப்பெற்று உயர் அழுத்தத்துடன் அமுக்கப்படுகிறது. இவ்வாறு அமுக்கப் பட்ட காற்று கொதி கலனுக்குள் (Combustion Chamber) தள்ளப்படுகிறது. இங்கு எரிபொருள்களாக எண்ணெய், நிலக்கரி காற்று முதலிய பயன்படுத்தப் படுகின்றன. வெப்ப நிலை 850°Cக்குச் செல்கிறது. உயர் வெப்பத்தையும், உயர் அழுத்தத்தையும் உடைய வளி, சுழலியினுள் செல்கிறது (இச்சுழலியின் அமைப்பு நீராவிச் சுழலியின் அமைப்பைப் போன்றதே).

சுழலியில் உருவாகும் ஆற்றலில் பெரும்பகுதி அமுக்கி (Compressor) வேலை செய்வதற்கும், மறுபகுதி எந்திரத்தை நடத்துவதற்கும் பயன்படுகிறது. சுழலிகளில் வெப்பமாற்றி (Heat Exchanger) கூடயும் பயன்படுத்துகிறார்கள். இதனால் வெப்பக் காற்று மீண்டும் பயன்படுத்தப்பட்டு, எந்திரத் திறன் உயர்கிறது.

நன்மைகள்: உயவிடும் எண்ணெய் (Lubricating Oil) அதிகமாகப் பயன்படுவதில்லை. எனவே எந்திரத்தின் நிறை (Load) குறைகிறது.

∴ அதிகமான எரிபொருள் தேவைப்படுவதில்லை. (Octane Fuel) இதன்காரணமாக வாயுச் சுழலியில் விசைத்தடை ஏற்படுவதில்லை. பொருட் செலவு நிலை சீர் எய்துகின்றது.

∴ வளிச் சுழலி எந்திரங்களில் மாற்று இயக்கப் பகுதிகள் (Reciprocating Parts) இல்லாமையால் எந்த நிலையிலும் கீழுபறந்தாலும் அதிக உயரே பறந்தாலும், சாய்ந்தாலும், விரைவாகச் செனருலுங்கூட மிதந்து செல்கிறது. இதனால் யாருக்கும், எந்தப் பகுதிக்கும் சிறு இன்னலும் ஏற்படுவதில்லை.

∴ இதில் எரியும் நிகழ்ச்சி (Combustion), கருவி தொடங்கும் பொழுது நடைபெற்றால் போதுமானது.

∴ வெப்ப மாற்றிகள் இல்லா வளிச் சுழலியின் நிறை மிகக் குறைவு.

∴ மிகுந்த சுமலும் விசையால், வளிச் சுழலியின் பருமம் குறைகிறது.

∴வளிச்சுழலியில் மிகக் குறைந்த பாகங்களே உள. எனவே பொறியியல் நுணுக்கம் குறைந்த அளவில் தேவைப்படுகின்றது.

∴ பகுதிகள் குறைவாக இருப்பதால், வளிச் சுழலிகளை இயக்குவது எளிது.

∴ இதில் வளி நன்கு வெளியேற்றப்படுகிறது.

∴ மிகக் குறைந்த வெப்ப நிலையிலும், அமுக்கி (Comprssor) நன்கு வேலை புரிகின்றது.

இந்தி எதிர்ப்பு

நற்றமிழில் பாப்புனைந்து நானுனக்குப் புகழ்பாடல்
வேண்டுமென நினைக்கு வாயேல்,
உற்றி துகேள்; உளந்திடங்கொள் உடலுரங்கொள் உறுமிஎழுந்
துனக்குள்ள உரிமை உன்னிப்
பொற்றமிழா! போர்க்களம்செல்; இந்திவெறிப் புலையர்களைப்
பொள்ளெனக்கொல்; குருதிப் பொட்டுன்
நெற்றியிலே பீடெனக்கொள்; வெற்றியொடு நீதிரும்பி
என்னெதிரில் வந்து நில்லே!

பூமாலை ஆயிரந்தாம் போட்டாலும் போதாவே!
புகழ்நிலைக்க வேண்டு மென்றோர்
பாமாலை மேலாவல் பைந்தமிழா! நீகொண்டால்
பண்டமிழைப் புரக்க வென்றே
வாமகனே! பகைக்கஞ்சா வயப்புலியே இந்திவெறி
எனும்பகையை வெட்டிச் சாய்க்கப்
போமறவா! பொருகளத்தில் புகுந்துவினை யாடிவிட்டுப்
பெருமையொடு திரும்புவாயே!

பொன்னெழுத்தில் உன்மறத்தை நான்பொறிக்கும் புகழ்கிடைக்க
வேண்டுமென நீநி னைத்தால்,
உன்னுயிரைத் தூசெனவே எண்ணிக்கொள் ஒண்டமிழைக்
காப்பதெனும் உறுதி யைக்கொள்!
மின்னுகின்ற வாளினைக்கை ஏந்திச்செல்; மாற்றானைக்
காலடியில் மிதித்து வெட்டு!
தென்னவர்கள் வெந்திறலை ஒன்னலர்கள் தெரிந்தோடச்
செய்துவிட்டுத் திரும்பு வாயே!

வரலாற்றுத் தமிழ் மறவர் வரிசையிலே உன்பெயரும்
வாழ்ந்திருக்க வேண்டும் என்றுல்
அரவாட்டம் ஆடுகின்ற இந்திவெறி அரக்கர்களை
அரிவாளால் அச்சம் இன்றிக்

கறிவாட்டம் முதல்பார்த்துக் கால்வேருய்க் கைவேருய்க்
களிமண்வாழ் தலையும் வேருய்த்
தெறித்தோடத் தயங்காமல் துண்டாக்கி நாற்புறமும்
எரிந்துவிட்டுத் திரும்பு வாயே!

உலகிருக்கும் வரைஇருக்கும் உயர்தனிச்சீர் ஒண்டமிழில்
உன்புகழும் அழியா தோங்கி
நிலைத்திருக்கப் பாட்டொன்று நானெழுத வேண்டுமென்று
நீநினைத்தால் ஒன்று சொல்வேன்,
வலிந்துவரும் இந்தியெனும் வடவரக்கி வயிற்றுக்குள்
வேல்பாய்ச்சு, காலை வெட்டு!
தலையைக்கொய்! பல்லைஉடை! குறையுடலைத் தயங்காமல்
குழிவெட்டித் தள்ளு வாயே!

—மு. மகிழரசன், சென்னை-34

புறவுலகம் காட்டாத சிறைபு குந்து
புறப்பட்ட மறப்பாட்டுப் புறநா னூற்றுத்
திறல்மிகுந்த செந்தமிழர் செல்வங் காள்;நம்
செந்தமிழின் நிலைகாக்கும் அரிமாக் காள்!நீர்
விறல்மிகுந்த செயல்செய்தீர் சிறையில் வெந்து;
வெற்றியினைத் தமிழுக்கு விளைப்பீர்! ஓர்நாள்
மறத்தமிழர் வரலாற்றில் மறையா நின்றே
மன்னிவிடத் தொண்டுதனில் மடிந்தீர் வாழ்க!

ஒருசொட்டுச் செங்குருதி உடலுக் குள்ளே
ஓடுகிற வரை உறுதி தளரேன்; நில்லேன்!
அருந்தமிழைக் கரையான்கள் அரிப்ப துண்டோ?
அரிமாவே ஆனாலும் ஆற்றேம் என்று
கரையுடைந்த வெள்ளம்போல் காப்பில் லாமல்
களம்நோக்கிக் கிளம்பிட்டீர்! விலங்கு பூட்டாச்
சிறைவாழ்க்கைத் துன்பத்தில் செத்தீர் என்றால்
செந்தமிழின் பெருவாழ்வு சேய்மை யாமோ?

எப்பக்கம் புகுந்துவிடும் இந்தி, அஃ துன்
எத்தகைய பட்டாளம் கூட்டும் என்று
கொப்பளித்துப் புகழ்தெறிக்கும் பாவேந் தர்தம்
குறிக்கோளில் வாளெடுத்தீர்! இனப்பற் றாலே!
இக்கட்டு தமிழுக்குச் சூழ்ந்த போழ்தே
இடிமின்னல் படையென்று தொடர்ந்து சீறக்
கைகட்டிச் சிறையிட்டார் எனினும் நெஞ்சம்
கலங்காத தமிழ்மறவீர் வாழ்வீர் நன்றே!

—மா. செல்வராசன், சென்னை-30.

குன்ரு உரமும் குறையா மறமும்
பொன்ரு உணர்வும் புகழ்சேர் அறிவும்
கொண்டசெந் தமிழர் கொலைவாள் எடுத்தனர்
அண்டிடும் பகையே அலறியே ஓடுக!

என்மொழி தமிழ்மொழி; என்னினம் தமிழினம்;
என்வழி குறள்வழி என்னிடம் தமிழகம்;
என்பவர் இன்றே எழுந்தனர் புயலென
அண்டிடும் பகையே அலறியே ஓடுக!

தமிழ்மகன் கனன்ருல் புலியினம் மருளும்;
தமிழ்மகன் எழுந்தால் பகையெலம் பணியும்;
தமிழ்மகன் களம்புகின் தலைபல குவியும்;
தமிழ்மொழிப் பகையே! தாவியே ஓடுக!

தமிழினம் புலியினம், தமிழ்க்கது வாழும்
தமிழ்மொழி இலையெனில் வேருடன் வீழும்
என்பதை உணர்ந்தே இருந்தமிழ்ப் பகையே
இன்றே ஓடிடு வந்தநின் வழியே!

—குராயூர் எழிலன்

பெரிதென்ன தமிழைவிட.? ஒன்றும் இல்லை!
பிறகுமுயிர் பேணிடலில் மறமும் இல்லை!
சரிதிண்ணம் தமிழ்மாய்வ தென்ரு நீயும்
சாய்ந்திட்டாய் வெந்தீயில்! என்னைப் போன்ரூர்
நரிதின்ன இடுகாட்டில் நாயும் தின்ன
நாணமிலா உடற்பெற்ரேம்! நற்றமிழ்காய்
எரிதின்னத் தளிருடலே ஈந்து விட்டாய்!
எம்நெஞ்சில் தெய்வமென இணைந்திட் டாயே!

நின்மேனி நன்மேனி! நெடுந்த மிழ்க்காய்
நெருப்பினிலே புடம்போட்டுச் சிவந்த மேனி!
பொன்மேனி தீநடுவே பொரியும் போழ்தும்
"பூந்தமிழே! நீவாழ்க!" என்று சொன்ன
தன்மானப் பெட்டகமே! தலைசி றந்த
தமிழாநீ தமிழாலே மாய்ந்து விட்டாய்!
என்மேனி புண்மேனி! நின்றன் மேனி
என்றென்றும் வாழும்சா ரங்க பாணி!

—ந. வில்லவன் கோதை, குடந்தை.

பல் சுவை

காலைஎழுந் ததுமுதல்கண் ணுடி பார்க்கும்
கருத்துடைய கன்னியர்காள் சிறுவர்காள் நீர்
மாலைமதி போன்றுமுகம் திருத்திஞலும்
மருப்போன்று மாசுபடி வதனைக் காண்பீர்!

சேலையினுல், சீருடையால், தலையை வாரும்
சிறப்பதனுல் உடலழகைச் சிங்கா ரிக்கும்
போலியழ கொழித்துநும துளம் திருத்தும்
பொன்னுன இலக்கியக்கண் ணுடி பாரீர்!

மெய்யழகை நாளும்காண் விருப்பால் வீட்டு
வெளிமுகப்பில், உள்நடையில், மேல்முற் றத்தில்
கையில்,பணப் பையிலுடைப் பெட்டி யில்,கைக்
கணக்கேட்டில் செல்லூர்தி தன்னில் சட்டைப்
பையில்,நிலைப் பேழையில் கண் ணுடி வைத்துப்
பார்ப்பதையே பொழுதெனக்கொள் சிறியோர் நீர்வாழ்க்
கையழகைத் திருத்திடவே நாளும் காணும்
கண்ணுடி பண்டைஇலக் கியமே யன்ரே!

முந்திநிலைக் கண்ணுடி முகம்பார்த் துங்கள்
முகத்தழகும் தலையழகும் முனைந்து காண்பீர்
ஐந்துபுலச் சேர்க்கையினுல் அழுக்குப் பட்ட
அகத்தழகைத் திருத்தும்வழி அறிவீர் நாளும்
நந்தமுன்னோர் வாழ்ந்தபண்பின் நலத்தை இன்று
நாம்கண்டு திருந்தவென்றே நாவ லோர்முன்
செந்தமிழில் செய்தஇலக் கியமாம் வெள்ளித்
திரைகண்டும் வாழ்க்கையினைத் திருத்திக் கொள்வீர்!

ஒருசிலரே விரும்பும்உடல் அழகை எண்ணு(து)
உலகத்தார் விரும்பும்உளத் தழகை ஓர்வீர்
பொருள்நிறைந்த இலக்கியக்கண் ணுடி பாரீர்
பொருந்துகருத் தணியைமனம் பொலியப் பூண்பீர்!
மருவுபணி வின்சொல்நடு நிலைவாய் மையால்
மனத்தழகும் சொல்லழகும் மருவப் பெற்றே
அருமைபெறு செயலழகும் அமைய வாழ்வை
அழகுபடுத் துவதேபே ரழக தாகும்!

—புலவர்-சுந்தரேசன், சீர்காழி.

வெண்கடம்பின் நறுநிழலில் நீயேன் இன்று
வியப்புறவே வேய்ங்குழலை ஊதி வந்தாய்?
கண்ணிமைத்துத் துயிலாமல் கால மெல்லாம்
கனிவான கற்பனையில் மூழ்கிச் சோர்ந்த
புண்ணுளத்தைக் கூர்மைசெயும் குழலாம் வேலால்
புரையோடச் செய்கின்ருய்; புவியை விட்டு
விண்ணளவி இசைபாயும் திசைக ளெல்லாம்
வேய்ங்குழலின் ஓசையினைத் தொடர்ந்து செல்வேன்!

வீடில்லாப் புள்ளொத்துத் தனைகள் நீத்து
விண்முழுதும் சிறகடிக்க விரும்பு கின்றேன்.
கேடுதரும் நிலவுலகின் காதல் விட்டுக்
கெடுவாக முடிக்கின்ற பொறிய வித்துப்

பீடில்லா அடிமையெனைப் பிணித்துக் கொண்ட
பெருமாயச் சுழல்விட்டு, நெந்சை முற்றும்
ஊடுருவி உருக்குகின்ற தெய்வப் பாட்டை
உண்பதற்கே யுனைநானும் தொடர்ந்தேன் இக்கால்!

வேய்ங்குழலின் அமிழ்தவிசைச் சிறகு வாய்த்து
விண்ணெங்கும் பறப்பேனை எதுத டுக்கும்?
தீங்கிழைக்க முடிந்திடுமோ? உயர்ந்து சென்றால்
வான்முகடும் வீழ்குழியும் என்ன செய்யும்?
வீங்கியுள்ள மண்டிலத்தின் காலம் வெல்லா
வெளியினினும் ஒளிபாய வழிகள் எல்லாம்
தீங்குழலின் தேனிசையைத் தொடர்ந்து செல்லும்
சிறியேனின் உறுதியினைச் சிதைக்க மாட்டா!

—'அரங்கன்' புதுவை.

போலிச் சமயப் புரைகொள்கை போற்றியதால்
நாலும் இழந்தான் நறுந்தமிழன்—வேலை
அலையூர்ந்து சென்றே வணிகப் பொருள்ஈட்டித்
தலைப்பட்டான்; கீழ்ப்பட்டான் காண்.

பொய்மைத் தனம்நிறைந்த பொல்லாத நாகரிகம்
மெய்மை எனவெண்ணி மேற்கொண்டான்—உய்யக்
கலைஉணர்வுச் சான்றோர் கருத்துரைத்தும் கேளான்
தலைப்பட்டான் கீழ்ப்பட்டான் காண்.

—இரா. கிள்ளிவளவன், இரும்புதலை

அன்பெங்கும் செழித்தோங்கி நிறைதல் வேண்டும்;
அறிவுநிறை செயலெங்கும் விரிதல் வேண்டும்;
தென்பான குமுகாயம் அமைதல் வேண்டும்!
தெருவெல்லாம் தமிழ்மன்றம் பொலிதல் வேண்டும்;
மன்னுயிரைத் தன்னுயிராய்க் கொள்ள வேண்டும்;
மறுமலர்ச்சிக் கருத்துகளே எழுதல் வேண்டும்;
வன்பில்லா வழிமுறைகள வகுத்தல் வேண்டும்;
வகையான தொழில்பலவும் பெருக்கல் வேண்டும்;

நாட்டுக்கு நற்றொண்டு புரிதல் வேண்டும்;
நாடோறும் கலைப்பயிற்சி செய்தல் வேண்டும்,
வீட்டுக்கோர் நூல்நிலையம் அமைத்தல் வேண்டும்
வீணை வேலைகளை ஒழித்தல் வேண்டும்;
ஏட்டினிலே செந்தமிழைப் பொழிதல் வேண்டும்;
ஏருலகம் ஏற்றமுற உழைத்தல் வேண்டும்;
பாட்டினிலே புதுப்பொருளைக் காட்டல் வேண்டும்;
பார்புகழும் பண்போடு வாழ்தல் வேண்டும்;

—கைம்மலை, பொறையாறு.

தெரிந்து கொள்ளுங்கள்

விண்ணியல்

1. ஒளியின் விரைவு நொடிக்கு 1,86,000 கற்கள். அஃது ஓராண்டில் செல்லும் தொலைவு 5,86,569 கோடியே 60 இலக்கம் கற்கள்.

2. கதிரவனின் ஒளி இந்நிலவுலகை வந்தடைய 8 நிமயங்கள் ஆகின்றன. கதிரவனுக்கும் இவ்வுலகுக்கும் இடையேயுள்ள தொலைவு ஏறத்தாழ 9 கோடி கற்கள்.

3. இந்நிலவுலகிலிருந்து மிகத் தொலைவில் உள்ள உடுக்களின் (Stars) தொலைவு 8,40 00,000 ஒளியாண்டாகும். அதாவது (492,798,464.000,000.000.000, கற்கள்.)

4. பார்வைக்கு எட்டக்கூடிய மிகத் தொலைவில் உள்ள உடுக்களின் தொலைவு ஓரிலக்கம் ஒளியாண்டாகும்.

5. கதிரவனைவிட மிகப் பெரிய (விண்மீன்) உடு 'பீடல்குசு' என்பதாகும். அது கதிரவனைப் போன்று இரண்டே முக்கால் கோடி மடங்கு பெரியது. 'அண்டாரிசு' என்னும் உடு 9 கோடி மடங்கு பெரியது.

6. கதிரவக் குடும்பம் அமைந்துள்ள, நம் உடுத் தொகுதிகளில் இருக்கின்ற மொத்தஉடுக்களின் எண்ணிக்கை 4000கோடி. இவ்வுடுக்களின் கூட்டத்தைக் கடந்து புடவியில் மிகப்பல உடுத் தொகுதிகள் (கூட்டங்கள்) பயணம் செய்கின்றன.

7. 1937-இல் விண் வெளியில் என். சி. சி. 4157 (N. G. C. 4157) என்ற உலகு வெடித்துச் சிதறியதை அறிவியலறிஞர்கள் விண்தொலை நோக்காடியின் வழிகண்டனர். நிலஉலகுக்கும் அதற்கிடையேயுள்ள தொலைவு 2, 48,000 கோடி கோடி கற்கள். உண்மையில் அந்நிகழ்ச்சிநடைபெற்று 40 இலக்கம் ஆண்டுகள் சென்று விட்டன. நாற்பது இலக்கம் ஆண்டுகட்குப் பிறகுதான் அஃது அறிவியலறிஞர்கள் பார்வையில் பட்டது.

8. கதிரவக் குடும்பம் உட்பட இப்புடவியில் உள்ள உடுக்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு பெயரிட்டு நொடிக்கு ஒன்று மேனி அவைகளின் பெயர்களைக் கூறிக்கொண்டிருந்தால், அனைத்தையும் கூறிமுடிக்க 1700 ஆண்டுகள் செல்லும்.

10 உடுக்களின் கூட்டம் விண்வெளியில் (புடவியில்) LENSE வடிவான இடத்தில் சுற்றி வருகின்றன. இவ்விடம் நீளத்தில் 1,00,000 ஒளியாண்டுத் தொலைவும் அகலத்தில் 10,000 ஒளியாண்டுத் தொலைவும் பரந்து கிடக்கின்றது.

10. மிக்க ஆற்றல் வாய்ந்த விண் தொலை நோக்காடியின் வழி இதுவரை அறிவியலறிஞர்கள் நோக்கிய தொலைவு, பதினாறுகோடி ஒளியாண்டுகளாகும். இப்பொழுது 50 கோடி ஒளி

யாண்டுத் தொலைவுவரை காண இயலுமாறு மிகப்பெரிய பெருக் காடி ஒன்றை அமெரிக்காவில் அமைத்துள்ளனர். கண்ணாடியின் குறுக்களவு 100 விரற்கடை (100 அங்குலம்)

11. அண்மையில் அமெரிக்க 'மௌண்ட்டு பலோமர்' வின் ஆய்வுக் கூடத்தினர் ஏறக்குறைய 17 அடி குறுக்களவுள்ள கண் ணாடியையுடைய விண்தொலை நோக்காடி ஒன்றை அமைத்துள்ள னர். இதன் வழி நூறு கோடி ஒளியாண்டுத் தொலைவிலுள்ள யாவற்றையும் காண இயலும்.

12. உலகங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் இப்புடவியின் குறுக்களவு ஏறத்தாழ 7 ஆயிரம் கோடி ஒளியாண்டுகள். (420,000,000,000,000,000,000 000 நானூற்றிருபது கோடி, கோடி கோடி கற்கள்) இப்புடவியை (Universe) நிலவுலகப் பெருங்கடலுக்கு ஒப்பிட்டால், ஒரு துளி யைக் கதிரவ குடும்பத்திற்கும் ஓர் அணுத் துளியை (கண்ணுக்குப் புலனாகாதது) நாம் வாழ்கின்ற நிலத்திற்கும் ஒப்பிடலாம்.

13. கதிரவனின் குறுக்களவு 8,64,000 கற்கள். இதனுள் நிலவுலகைப் போன்ற பருமனுள்ள ஏறத்தாழ 13 இலக்கம் உல கங்களைப் புதைக்கலாம்.

14. கதிரவனின் மேற்பரப்பின் வெப்பம் 6000 பாகை சென் டிகிரேடு. (தண்ணீரின் கொதிநிலை 100 பாகை) கதிரவனின் உட்புற வெப்பம் இரண்டு கோடி பாகை சென்டிகிரேடு.

15. இந்நிலவுலகின் அகவை ஏறக்குறைய 200 கோடி ஆண்டு களென அறிவியலறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். கதிரவனின் அகவையும் 250 லிருந்து 300 கோடி ஆண்டுகளென்று நம்பு கின்றனர்.

16. ஓர் ஆண்டில் உலகத்திலுள்ள நிலக்கரி முதலிய எல்லா எரிபொருள்களிடமிருந்தும் நாம் பெறும் வெப்பத்தைப்போல் நூறுகோடி மடங்கு வெப்பத்தைக் கதிரவனிடமிருந்து ஒருநாளில் நாம் பெறுகின்றோம்.

17. கதிரவன் தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள 27 நாட்கள் ஆகின்றன. அது விண்ணில் செல்லும் விரைவு நொடிக்கு 12 கற்கள்.

18. இவ்வுலகிலுள்ள மாழைப் பொருள்கள் (உலோகங்கள்) அனைத்தும் கதிரவனில் இருக்கின்றன. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் போன்ற மாழைப் பொருள்களையும், உயிர்வளி, நீர்வளி, நிலவுலகில் இல்லாத ஈலியம் இவைபோன்ற மூலகங்களை யும் கதிரவன் தன்னகத்தே கொண்டுள்ளது. எல்லாம் ஆவியாகி வளிநிலையில்தான் உள்ளன.

தொகுப்பு: செம்பியன்.

ஒலி பெருக்கி!

ம. இலெ. தங்கப்பா

ஒலிபெருக்கி தமிழ்நாட்டின் மானக் கேடே!
ஒலிபெருக்கி தமிழ்மகனின் இழிவின் சான்றும்!
ஒலிபெருக்கி பேதையரின் கைக்கு வந்த
ஒருபுதிய விளையாட்டுப் பாவை போலாம்!
ஒலிபெருக்கி மற்றவர்தம் உரிமை கவ்வ
உணர்வற்றார் கையிலுள்ள கன்னக் கோல்காண்!
ஒலிபெருக்கி நம்துயிலைக் கொல்வதற்கே
ஊர்ந்துவரும் நச்சரவம் இந்த நாட்டில்!

திருமணத்துப் பந்தலென்றால் ஒலி பெருக்கி!
தெருக்குறத்தி ஆட்டமென்றால் ஒலி பெருக்கி!
வெறுமணத்தார் கறைகள்தமை மறைத்தல் வேண்டி
விழாவெடுக்கும் கோவிலிலே ஒலி பெருக்கி!
பெருமைமிகும் அரசியலார் விழாவில் எல்லாம்
பெருங்குரலில் பாடுதற்கும் ஒலி பெருக்கி!
சிறுமைக்கு நாகரிகம் பேரி ரைச்சல்
சேர்ந்ததுவே ஒலிபெருக்கி அதனி னேடும்!

பள்ளிவிழா திறப்புவிழாக் கேலிக் கூத்தில்
பட்டிதொட்டி மூலையெலாம் ஒலி பெருக்கி!
தள்ளவொணாப் பொதுக்கூட்டம் தொடங்குமுன்னே
தான்தொடங்கிப் பாட்டலறும் ஒலி பெருக்கி!
கொள்ளிவைத்தால் ஒலிபெருக்கி! இழவு வீட்டில்
கூடியழ, மாரடிக்க ஒலி பெருக்கி!
வெள்ளாமுகக் கழுதைகள்தாம் கத்தல் போல
வெளியெல்லாம் அலறல்செய் ஒலி பெருக்கி!

சிற்றூரில் அறியாதார் செய்வார் என்றால்
சீர்மைமிகு நகரந்தான் உயர்வே யாமோ?
கற்றவராம் இவரிங்கே? சீச்சி! நாளும்
கதறுகின்ற ஒலிபெருக்கி கிழிக்கும் காதை
சற்றினிதாய்ப் பூங்காவில் இசை மிதந்தால்
சார்ந்திடுவோர் நுகர்ந்திடுவார்! அதுதா னின்றிச்
சுற்றுகடைத் தெருவெல்லாம் காதடைக்கச்
சுழலுதல்தான் ஒலிபெருக்கிக் கழகோ அம்மா!

ஒருதெருவில் ஒலிபெருக்கி அலறக் கேட்டே
ஒளிந்தோடும் தெருவிலும்வே றெலி பெருக்கி
கருதுமுயர் இசையுணர்வே யில்லார்; புன்கைக்
காட்டுமிராண் டிக்கூட்டம் குருடர்! புல்லர்!

அரிதுயர்ந்த இசையின்பம் நுகர்தற்கென்றுல்
அறைவீடு போதாதோ? அயலான் வீட்டுப்
பெருஞ்சுவரும் இடிந்திடுமா ரேசை யிட்டுப்
பிறப்பதில்தான் மகிழ்வென்றுல் யார் பொறுப்பார்?

நள்ளிரவில் ஊரெல்லாம் துயிலும் வேளை
நடுங்காமல் ஒலிபெருக்கி ஓலம் போடும்!
கொள்ளையிட்டுப் பெரும்பொருளை மூட்டை கட்டும்
கோணல்மனப் பணக்காரன் வீட்டில் அன்று
நொள்ளைபடு திருமணமாம் என்றுல், சூழ்ந்த
நூறுவீட் டார்தலைகள் நோதல் நன்றே?
எள்ளிடுவான் பிறநாட்டான் இதனைக் கண்டால்
எட்டுணையும் பண்பறியாக் கூட்ட மென்றே!

புல்லனே உன்மகள்தான் பூத்தாள் என்றுல்
பொதிந்து வைத்துக் கொள்தல்நலம்; அதனைவிட்டு
நள்ளிரவில் பிறர்துயிலைக் கெடுப்பதற்கே
நாட்டிலுனக் கேதுரிமை? சீச்சி, காய்ந்த
சுள்ளிக்கும் உதவாத ஆட்சியாளர்
சொரணையற்றுப் போனரோ? ஒலிபெருக்கி
கொல்லற்கும் பயன்படுமோர் கருவி என்று
கொடுமுண்மை இன்னமுமா தெரிந்தார் அல்லர்!

ஒலிபெருக்கி நற்கருவி! மக்கள் நன்மைக்
குழைக்குமென மேல்நாட்டான் அதனைச் செய்தான்
தெளிவில்லா இந்நாட்டான் அதனை யின்று
தீமைக்குப் பெருங்கருவி ஆக்கிக் கொண்டான்!
பலர்நடுவில் பேசவன்றே ஒலி பெருக்கி
பாட்டலறிக் காதுகெடக் கொள்ளலாமோ?
புலியுறுமல் நரியூளை போலக் கத்தும்
புதுக்கருவி ஒலிபெருக்கி இந்நாட்டார்க்கே!

அறைவீட்டில் வானெலியை வைத்துக் கொண்டே
ஆர்வமுளார் கேட்கட்டும்; பிறர்க்கு நோவாக்
குறைவான ஓசையிலே பாட்டைப் பண்ணைக்
குறிக்கட்டும் இரவுபகல்! ஆர் தடுப்பார்?
செறிவாகக் கூரையுச்சி மேலேநின்று
செவிகிழிய ஊரெல்லாம் குரலெழுப்பும்
பறைபோலும் ஒலிபெருக்கி கதறல் நன்றே?
பண்பறிந்தார் இச்செயலைச் செய்தல் உண்டோ?

செப்புமுயர் வாழ்வு வந்தால் நள்ளிரவில்
சிறுமக்கள் குடைபிடிப்பார் என்பார்; உண்மை
ஒப்பிலிந்தத் தற்குறிகள் நாட்டில் அந்தோ
ஒலிபெருக்கி கிடைத்ததுபார்! விடுவாருண்டோ?
கப்புமிருள் நள்ளிரவில், அந்தி நேரம்
கடும்பகலில், கடைகளிலே, வீட்டில், மேட்டில்
எப்பொழுதும் எவ்விடத்தும் ஒலி பெருக்கி!
இசையுணரும் உயர்மாந்தர் துயர்பெருக்கி!

நடுக்குகடுங் குரலெனினும் ஒலிப்பெருக்கால்
நல்லிசைதான் வளர்வதுண்டா? அதுவுமில்லை
படக்கயவர் பணம் பறிக்க எழுதுகின்ற
பண்பழிக்கும் குப்பைகளைப் பாடலென்றே
அடுக்குகின்ருர்! பாடுகின்ற கணிகை சீச்சி
அதற்குமேல் அருவருப்பைக் கூட்டு கின்ருள்!
இடத்தினிலே நற்பெண்டிர் இருக்க மாட்டார்
இளித்தவாய்ப் புல்லருக்கோ "இசை" அமைத்தார்!

திரைக்கணிகை உடல்காட்டிக் குதிக்கப் பண்ணின்
திறமறியா ஒருவன் அவன் 'இசை' அமைக்க
அரைப்படிப்புப் பயல்களெலாம் "கவிஞ"ராகி
அருவருக்கும் புல்லுணர்வைப் பாட்டாய்ச்செய்ய
வரைப்படுத்தும் இசைத்தட்டில் பதியவைத்து
வாய்பிளக்கும் மாந்தரிடை விற்கின்ருரே!
கறைப்படுத்த வந்தாரே நாட்டை! இந்தக்
கயவர்க்கேன் ஒலிபெருக்கி வேண்டும் அம்மா?

மாந்தர்களோ? விலங்குகளோ? இவரெல்லாரும்?
மற்றவர்தம் உணர்வுதனை மதித்தல் செய்யார்
சார்ந்துளதம் அயற்புறத்தைச் சற்றுமெண்ணுச்
சழக்கர்களால் நாட்டுக்குப் பயனுமுண்டோ?
ஏந்துகின்ற ஒலிபெருக்கி பயனில்லாமல்
இரைகின்ற பெருந்தீங்கைத் தடுத்தல் வேண்டும்.
ஆந்துரையும் பொதுப்பண்பு வளர்தல் வேண்டும்
அந்நாளே இந்நாடு சிறக்கும் நாளே!

[ஒருநாள் முன்காலை ஏழெட்டு ஒலிபெருக்கிகள் அலற விழித்தெழுந்து எழுதியது.]

—★—

போர் மறவனும் காதலும்

யொர்சு பெர்னர்டு சா. தமிழில்: வழுதி.

இரெய்னு: (சினத்துடன் எழுந்து மறுத்துக் கூறுகிறுள்) அதனுல்தான் அவன் நம்பிக்கையும் நன்றியும் இல்லாத ஒரு பூச்சியா யிருக்கிறுன்.

பிளண்டுசிலி: (முகத்தைச்சுளித்து) நன்றியுணர்வை நீ விரும்பு கிறுயா? நான் விரும்புவதில்லை, இரக்கம் அன்பைப் போன்றது என்றுல், நன்றி யுணர்வோ அதற்கு மாறுனது.

இரெய்னு: நன்றி, (அவன்பால் திரும்பி) உமக்கு நன்றி யில்லை என்றுல் வேறென்ன உயர்ந்த உணர்வுமே இல்லை என்றுதான் பொருள். விலங்குகள்கூட நன்றியோடிருக்கின்றன. இப்பொழுது தெரிகிறது நீர் என்னை எப்படிக் கருதியிருக்கிறீர் என்று. நான் பொய் கூறியது உமக்கு வியப்பை உண்டாக்கவேயில்லை...நான் ஒவ் வொரு நாளும், ஏன், ஒவ்வொரு மணிநேரமும் வழக்கமாகப் பொய் சொல்லிக்கொண்டுதான் இருப்பேன் என்று நினைத்திருக்கிறீர், ஆண்கள் பெண்களைப்பற்றிக் கருதுவதே இப்படித்தான். (வருத் தத்துடன் அறையில் அங்கு மிங்கும் உலவுகிறுள்)

பிளண்டுசிலி: (கயக்கத்துடன்) எல்லாம் காரணத்தோடுதான். வாழ்க்கையிலே இரண்டுமுறைதான் பொய் கூறியதாகச் சொன்னுய். என் அம்மா, மிகவும் குறைத்துச் சொல்லி யிருக்கிறுய், இல்லையா? நான் ஏதோ சற்றுக் கவடு தெரியாதவன்தான். ஆனலும் என்னி டம் உன் நடிப்பு அரை நாள்கூட நிற்காது.

இரெய்னு: (எரித்து விடுபவள்போல் அவனை உறுத்து நோக்கி) நீர் என்னை இழிவாகப் பேசுகிறீர்.

பிளண்டுசிலி: நான் என்னம்மா செய்வது? நீ அந்தப் பெரு மிதத் தோற்றத்தை வரவழைத்துக்கொண்டு எடுப்பான குரலில் பேசும்பொழுது உன்னைப் போற்றத்தான் தோன்றுகிறது. ஆனல் நீ சொல்லும் ஒரு சொல்லைக்கூட நம்ப முடியவில்லையே.

இரெய்னு: (மிகக் கடுமையாக) என்ன சொன்னீர், பிளண்டு சிலி?

பிளண்டுசிலி: (சற்றும் பின் வாங்காமல்) அப்புறம்?

இரெய்னு: (தன் புலன்களையே நம்ப முடியாதவள் போல அவன் அருகில்வந்து நின்று) நீர் இப்பொழுது உண்மையாகத்தான் சொன்னீரா? சொன்னது என்ன என்று அறிந்து சொன்னீரா?

பிளண்டுசிலி: (அஞ்சாமல்) ஆமாம்; அப்படியேதான்,

இரெய்னு: (மூச்சு வாங்க) நான்! நான்! (நம்பமுடியாதவளாகத் தன்னையே சுட்டிக் காட்டுகின்றாள். "நானு பொய் சொல்லுபவள்?" என்னும் குறிப்போடு. அவனை சற்றும் அஞ்சாமல் அவள் பார்வையை ஊடுருவிப் பார்க்கின்றான். அவள் சட்டென அவன் அருகில் அமர்ந்து தன் கடுமையான போக்கினைக் குழந்தைப் போக்காக மாற்றிக் கொள்கின்றாள்) எப்படிக் கண்டு பிடித்து விட்டீர்?

பிளண்டுசிலி: உள்ளுணர்வு அம்மா, உள்ளுணர்வு. உள்ளுணர்வும், உலகப் பட்டறிவும்.

இரெய்னு: நான் பார்த்தவர்களில் என் பேச்சை உண்மையாகக் கொள்ளாத முதல் ஆள் நீர்தாம், தெரிகிறதா?

பிளண்டுசிலி: அதாவது, உன்னை உண்மையாகப் புரிந்து கொண்ட முதல் ஆள் நான்தான் என்று சொல்கிறாய்...

இரெய்னு: ஆம்; அப்படித்தான்...

(கொஞ்சலுடன், கூச்சம் நீங்கி) இதுபோல் என்னிடம் ஒருவர் பேசக் கேட்பது எவ்வளவு புதுமையாக இருக்கிறது! எப்பொழுதுமே நான் இப்படித்தான் நடந்து வந்திருக்கிறேன்.

பிளண்டுசிலி: அதாவது?

இரெய்னு: அதாவது, பெருமிதத் தோற்றமும், கணீரென்ற குரலும்! (இருவரும் ஒருங்கு நகைக்கின்றனர்) நான் சிறு குழந்தையாக இருக்கும் பொழுது என் செவிலியின்பால் அப்படி நடித்தேன். அவள் அதை நம்பி விட்டாள். என் பெற்றோரிடத்திலும் இவ்வாறே நடிக்கிறேன். அவரும் அதை நம்புகின்றார்.

பிளண்டுசிலி: ஆமாம்;... அவருங்கூட அந்தக் கலை கொஞ்சம் தெரிந்தவர்தானு இல்லையா?

இரெய்னு: (அதிர்வற்று) உம்?... அப்படியா நினைக்கிறீர்?

பிளண்டுசிலி: உனக்குத் தெரியாதா அவரை!

இரெய்னு : வியப்பாக இருக்கிறதே!...அவருமா அப்படி?... அவரை எவ்வளவோ உயர்வாக...(தளர்வுற்று)...சரி சரி...என்ன கெட்டு விட்டது? போகட்டும்...நான் எப்படிப் பட்டவள் என்று தெரிந்து போய் விட்டது உமக்கு. இனி நீர் என்மேல் வெறுப்புத் தான் கொள்வீர்.

பிளண்டுசிலி: (நல்லார்வம் ததும்ப, இருக்கையினின்றெழுந்து) இல்லே இளம் பெருமாட்டி, இல்லவே இல்லே...ஆயிரம்முறை சொல்வேன்—அதெல்லாம் உன் இளமைப் பருவத்துக் குரியது... உனக்குக் கவர்ச்சி பூட்டுவது...மற்றவர்களைப்போலத்தான் நானும். உன்செவிலி, பெற்றோர், செருசியசு...இவர்களைப்போலவே...பெரு வேட்கையோடு உன்னை வியந்து போற்றுபவனே நானும்.

இரெய்னு: (மகிழ்வுற்று) மெய்யாகவா?

பிளண்டுசிலி: (பெருமிதமாக மார்பில் தட்டிக்கொண்டு செருமானிய முறைப்படி—)...மெய்யாகவும்...உண்மையாகவும் சொல்கிறேன்.

இரெய்னு: (மிகக் களிப்புற்று) சரி...என் நிழற் படத்தை உம்மிடம் கொடுத்தது பற்றி என்ன நினைத்தீர்?

பிளண்டுசிலி: (திகைப்புற்று) உன் நிழற் படமா? அப்படி அப்படி ஒன்றும் நீ கொடுக்கவில்லையே.

இரெய்னு: (விறுக்கென) அதாவது, அஃது உமக்குக் கிடைக்கவில்லை என்கிறீரா?

பிளண்டுசிலி: இல்லே (புதியதொரு ஆவர்முடன், அவள் அருகில் அமர்கிறான், சிறிதும் கவலைப்படாமல்) நீ எப்பொழுது அதை எனக்கு அனுப்பி வைத்தாய்?

இரெய்னு: (முனிவுடன்) நான் அதை உமக்கு அனுப்பவில்லை (தலையைத் திருப்பிக்கொண்டு...தயக்கத்துடன் கூறுகிறாள்) அந்தக் குப்பாயத்தின் பக்கறையில் இருந்தது அது.

பிளண்டுசிலி: (உதட்டை மடித்துக் கண்களை உருட்டிக் கொண்டு) ஓ!...ஓ!...நான் அதைப் பார்க்கவே இல்லையே..இன்னும் அது பையில்தான் இருக்கும்.

இரெய்னு: (எம்பிக் குதித்து) இன்னும் அதிலேயா! பையில் கையை இட்டவுடனேயே அப்பா கண்டு கொள்வதற்கா! எப்படி இவ்வளவு முழு முட்டாள்தனமாக இருந்து விட்டீர்!

பிளண்டுசிலி: (தானும் எழுந்து) சரி...விட்டுத்தள்ளு. வெறும் நிழற்படம்தானே! அஃது யாருக்காகக் கொடுக்கப் பட்டது என்று அவருக்கு எப்படித் தெரியும்? அவரே அதைப் பக்கறையில் வைத்து விட்டார் என்று சொல்லேன்!

இரெய்னு: (கடுங் கசப்புடன்) சரி சரி; நிரம்பக் கெட்டிக் காரத்தனந்தான்! பின்னே இல்லையா? (கலங்கிக் குலைந்து) அய்யோ! நான் என்னதான் செய்யப்போகிறேனே!

பிளண்டுசிலி: ஆ! தெரிகிறது, தெரிகிறது...நீ அந்தப் படத்தில் ஏதோ எழுதி யிருக்கிறாய் போலிருக்கிறது! அது மூட்டாள்தனம்.

இரெய்னு: (கண்ணீர் பிதுங்கி) ஓ!...உமக்காகப் போய் அப்படிச் செய்தேனே!...என்னைப் பார்த்துச் சிரிப்பதைத் தவிர... வேறு சிறிதாவது அக்கறை காட்டுபவரா நீர்?—சரி...அதைவேறு எவரும் தொட்டிருக்க மாட்டார்கள் என்றுவது உறுதியாகத் தெரியுமா?

பிளண்டுசிலி: ...அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது. அந்தக் குப்பாயத்தை எப்பொழுதும் சுமந்துகொண்டே திரிய முடியாது பார்!...சுறுசுறுப்பான வேலை நடுவில், அவ்வளவு சுமையை யார் சுமந்து திரிய முடியும்!...

இரெய்னு: அதை என்ன செய்தீர்?

பிளண்டுசிலி: பீரோட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் அதை எப்படியாவது பாதுகாப்பாக வைக்க வேண்டியிருந்தது. தொடர் வண்டி நிலையத்திலுள்ள வைப்பறை (Cloak Room) நினைவுக்கு வந்தது. ஆனால், இந்தப் புதியமுறைப் போர்க்காலத்தில், முதலில் அதைத்தான் கொள்ளையடிப்பார்கள்!... அதனால்தான் பாதுகாப்பாக இருக்கட்டுமென்று அதை அடகு வைத்தேன்.

இரெய்னு: அடகு வைத்தீரா!!!

பிளண்டுசிலி: இது கேட்பதற்கு அவ்வளவு நன்றாக இல்லைதான். என்றாலும் பாதுகாப்புக்கு அதுதான் வழி. மூன்றாள்தான் அதை மீட்டேன். அடகுக் கடைக்காரன் பையிலிருந்ததை எடுத்துப் போட்டிருப்பானே என்னவோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

இரெய்னு: (மிகுந்த சினத்துடன், அவனைக் குத்தும்படியாகச் சொற்களை வீசுகிறாள்) உமக்கு இழிவான கடைக்காரனுக்குரிய

அறிவுதான் இருக்கிறது. என்ன என்ன எண்ணங்கள்தாம் உமக்குத் தோன்றுகின்றன! ஒரு பெருங்குடி மகனுக்கு இப்படியெல்லாம் தோன்றவே தோன்றாது.

பிளண்டுசிலி: (பதறுமல்) அதுதானம்மா சுவிசுக்காரன் தேசியப் பண்பு. (மிசைப்பலகையை நோக்கித் திருப்புகின்றான்)

இரெய்னு: உம்மை நான் பார்க்காமலே இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்! (அவனிடமிருந்து கடுப்புடன் திரும்பிப் பலகணி விளிம்பில் அமர்கிறாள் கொதிப்புடன்.)

(உலூக்கா ஒருதட்டில் மடல்கள் தொலைவரிகளைக் குவியலாகக் கொணர்கின்றாள். அஞ்சாத மிடுக்கான நடையுடன் மிசைப் பலகையை நோக்கிச் செல்கின்றாள். அவளது உடையின் இடதுகை தோள்வரை மடித்து வைக்கப் பெற்றுளது. தோளில் ஏற்பட்ட காயத்தை ஒரு மினுமினுப்பான அகன்ற வங்கி மூடி மறைத்திருக்கிறது)

உலூக்கா: (பிளண்டுசிலியை நோக்கி) எல்லாம் உமக்குத்தான் (தட்டை மேசைமேல் வீசுவதுபோல் தடாலென்று மடல்களைக் கொட்டுகின்றாள்) வெளியே ஆள் காத்துக் கொண்டிருக்கின்றான். (அவனுக்காக மடல்களைக்கொண்டுவர நேரினும் கூடப் பகைவனிடம் மதிப்புக் காட்டக்கூடாதென்பது, அவள் உறுதி.)

பிளண்டுசிலி (இரெய்னுவை நோக்கி) மன்னித்துக் கொள். நான் கடைசியாக அஞ்சல்பார்த்தது மூன்று கிழமைகளுக்கு முன்பு. இவையெல்லாம் அதற்குப் பிறகு சேர்ந்திருப்பவை. நாலு தொலைவரிகள்! ஒரு கிழமையாகி விட்டதே! (ஒன்றைத் திறக்கிறான்) ஓகோ!...கெட்ட செய்தி!

இரெய்னு: (எழுந்து சற்றுக் கழிவிரக்கத்துடன் சற்று முன்நடந்து வந்து) கெட்ட செய்தி?

பிளண்டுசிலி: என் தந்தை இறந்து விட்டார். (இதழ்களை மடித்தபடி தொலைவரியை நோக்குகின்றான். தன் ஏற்பாடுகளில் வந்து விழுந்த எதிர்பாராத மாறுதலைப் பற்றி மனம் வட்டமிடுகின்றது. உலூக்கா சடுக்கென மறுபுறம் செல்கிறாள்.)

இரெய்னு: ஆ வருத்தமான செய்தி!

பிளண்டுசிலி: ஆம். இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் வீட்டுக்குப் புறப்பட வேண்டியிருக்கும். பெரிய பெரிய உணவு விடுதிகளே யெல்லாம் விட்டு விட்டுப் போய் விட்டார். அவற்றை யெல்லாம் மேற்பார்க்க வேண்டுமே. (நீண்ட நீளமான உறைக்குள் ளிருந்த கற்றையான ஒரு மடலைப்பிரிக்கின்றான்)...குடும்ப வழக்கறி ஞரிடமிருந்து, மண்டையிலடித்தாற்போல் ஒரு மடல்...(உள்ளிருப் பவற்றை விரித்துப் பார்ப்பி அவற்றை நோக்குகின்றான்) அட கட வுளே. எழுபது! இரு நூறு! (பெருஞ் சலிப்புடன்) நானூறு! நாலாயிரம்! ஒன்பதாயிரத்து அறுநூறு! இவற்றை யெல்லாம் வைத்து நான் என்னதான் செய்யவோ!

இரெய்னு: (நடுக்கத்துடன்) ஒன்பதாயிரம் உணவு விடுதிகளா?

பிளண்டுசிலி: உணவு விடுதிகளா!...சீச்சி!...உனக்கு என்ன தெரியும்! சேச்சே! மிகவும் கேலிக் கூத்தாயிருக்கிறதே! மன் னித்துக்கொள்...வந்திருக்கும் ஆளுக்குப் புறப்படும்செய்தி சொல்ல வேண்டும். (கையில் தாட்களுடன் வெளியே செல்கிறான்)

உலூக்கா: (பிளண்டுசிலியை மட்டமாகப் பேசினால் இரெய்னு வைப் புண்படுத்தலாம் என்று உள்ளுணர்வால் தெரிந்துகொண்டு) ...அந்த சுவிசுக்கார ஆளுக்குக் கொஞ்சமும் இளகிய மனமே இல்லை...இறந்துபோன அப்பாவுக்காக வருந்தி ஒரு சொல் கூடச் சொல்லவில்லையே!

இரெய்னு: (வெறுப்புடன்) வருத்தம்! ஆண்டுக் கணக் காக மற்றவர்களைக் கொல்வதைத் தவிர வேறு வேலையே அறியாத வர்! அவருக்கு என்ன கவலை? எந்தப் போர் மறவனுக்குத்தான் என்ன கவலை? (ததும்பும் கண்ணீரை அடக்கமுடியாமல் அடக்கிக் கொண்டு வாயிலை நோக்கிச் செல்கின்றாள்)

உலூக்கா: படையாள்நர் சானுபும்தாம் போர் புரிந்திருக் கிறார். அவருக்கு 'இளகிய மனம்' எவ்வளவோ இருக்கிறதே! (வாயிலருகில் இரெய்னு முறுக்காக நிமிர்ந்து வெளியே செல்கின் றாள்) ஆகா! உன் போர் மறவனிடம் நீ மிகுதியான உணர்ச்சியை எதிர்பார்க்கமுடியாது என்று நான் நினைத்தது சரிதான். (இரெய்னு வைப் பின் தொடர்கின்றாள். எதிரில் நிகோலா கையில் விறகுக் கட்டைகளுடன் வருகிறான்.)

(தொடரும்)

தமிழகம் பற்றித் திரு. வி. க.

தொகுத்தது: ச. ஆசீர்வாதம், பழையனூர்.

[இது திரு. வி. க. 'நவசக்தி' என்ற தாளிகையில் 1921, '22', '24 ஆகிய ஆண்டுகளில் எழுதிய கட்டுரைகளில் தொகுத்ததாகும்]

"வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" எனத் தமிழ் நாட்டின் எல்லையைத் தொல்காப்பியப் பாயிரம் வகுத்துக் கூறியிருக்கிறது. இவ்வெல்லைக்குட்பட்டு வாழ்ந்த மக்களின் சிறப்பார்ந்த நாகரிகத்தை அறிவிக்குங் கருவிகள் பண்டைத் தமிழ் நூல்களாகும். பழந்தமிழ் நாட்டைக் கடல் கொண்டது. எத்துணையோ புதுமக்கள் தமிழ் நாட்டில் குடி புகுந்தார்கள். அதனாலும் தமிழ் அழியவில்லை. தமிழைத் தொலைக்கவும் சிலர் முயன்றனர், முயலுகின்றனர். அவர் தம் முயற்சியாலும் தமிழ் அழியவில்லை. அழியப் போவதும் இல்லை. தமிழ் மொழிக்குப் பின்னர் எத்தனையோ மொழிகள் தோன்றி இறந்தன. ஆனால் தமிழ் மொழியோ இன்றும் இளமையுடன் நின்று நிலவுகிறது. இம்மொழியினூடே எத்துணையோ மொழிகள் கலந்தன; கலக்கின்றன. அவற்றின் கலப்பாலாதல் தமிழ் அழிந்ததோ? இல்லை. தமிழின் தொன்மையும், தன்மையும் என்னே! என்னே!!

இத்தகு நாடு இந்நாளில் எந்நிலையிலிருக்கிறது? இதைக் கூர்த்த அறிவு முனைப்பொடு நோக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் மகளும் உலகில் வாழவும் எண்ணங்கொள்வரோ? தமிழ் நாட்டின் வளம் எங்கே? வனப்பெங்கே? நாகரீகம், அன்பு இவையும் எங்கே? தமிழ் நாட்டு மக்கள்தாம் எங்கே? ஐயகோ! மாக்களனையாரெல்லாரும் மக்களாகி விட்டனரே! அந்தோ தமிழ் மக்களே! வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே நாகரீக மக்களாக வாழ்ந்த நீங்கள் இன்று தேவர்களாகவன்றே வாழ்தல்வேண்டும்? நீங்கள் உங்கள்செல்வமனைத்துமிழந்து வறியர்களாய்ஊமையராய் வாடுகின்றீர்களே! உங்களைப்போல் வறியர்களாயும் ஊமையர்களாயும் வாழ்வோர் உலகில் உளரோ? தமிழர்களே தன்மானமுள்ளவர்களே! கண் விழியுங்கள்! எழுங்கள்!

நமது நாட்டை நம் முன்னோர்கள் தமிழ் நாடு என்றார்கள், அத்தமிழ்நாடு இப்போது எங்கே என்று நாம் வினவுகிறோம். நிலப்பரப்பு ஏதோ இருக்கிறது; தமிழ் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டைக் காணோம்! முற்றிலுங் காணோம் என்று கூறத் துணிகின்றோமில்லோம். தமிழ் நாடு சிறிது புலனாகிக் கொண்டேயிருக்கிறது. தமிழ் நாடு தமிழ் நூல்களில் உறங்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். தமிழ் நாடு தமிழ் மக்களிடைப் பெரிதுந் தவழ்வதைக் காண்கிறோமல்லோம்.

தமிழ் நாட்டின் முன்னே எத்துணையோ நாடுகள் எழுந்தன; ஆடின; பாடின! வீழ்ந்தன. தமிழ் நாடோ இன்னும் விழாம

லிருக்கிறது. பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் நாட்டிற்குக்கோலிய காலின் உரமென்னே! என்னே!! பல்லாயிர மாண்டுகளாக வீழாது வந்த தமிழ் நாடு, இதுபோழ்து வீழ்ந்து விடுமோ வென்னும் அச்சம் தமிழ் நாட்டினிடத்து அன்புடையார் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றி யிருக்கிறது. கற்றோருட் பலர் பத்தாண்டு பன்னீராண்டு–பதினேந்தாண்டு–பயிலுங் கல்வியை வயிற்றுக்கும், பட்டத்திற்கும் விற்பது எவ்வளவு இழிதகைமை? ஆங்கிலம் பயின்ற தமிழரிற் சிலர் தமிழ் நூல்களைப் பயிலாமலும், ஆராயாமலும் அவற்றிலுள்ள உண்மைகளை உணராமலும் அவற்றைக் குறைகூறி மகிழ்கிறார்கள். இவர்தம் அறியாமை இருந்தவாறென்னே! குறைகூறும் இக்கல்வியாளர்கள் ஏன் குறையொழியத் தாங்கள் உழைக்க முன்வருவதிலர். இவ்வினாவிற்கு இவர்கள் என்ன விடையிறுப்பார்கள்?

இந்தியாவின் பல்வேறு மொழிகளும், மாநிலங்களும் தம்மளவில் உயர்கின்றன. அத்துடனமையின் அது போற்றுதற்குரியதொன்றாகும். ஆயின் தம் வளர்ச்சி யொன்றையே நோக்கிப் பிறரின் மொழியையும் நலனையும் பாழ்படுத்தித் தம் உயர்வை நோக்கிப் பாய்கின்றனவே அதனை என்னென்பது? யாங்ஙனமமைவது? வன்முறை கால்கோடற்குத் தமிழ்க் குருதியின் ஓரணு துணையிருப்பினும் அக்குருதிப் பகுப்பைத் தீய்த்து வன்முறையை அழிக்கத் தோள் கொடுப்பதொன்றே இற்றைய தமிழுயிர் ஒவ்வொன்றினுடையவும் கடமையாகும்,

மகாராட்டிரத்தில் திலகர் தோன்றினர்; மகாராட்டிரத்தை வளர்த்தார். தாகூர், தாசு போன்ற பலர் வங்காளத்தில் தோன்றினர். வங்காளத்தை வளர்த்தனர். காந்தியடிகள் கூர்ச்சரத்தில் தோன்றினர், கூர்ச்சரத்தை வளர்த்தார். ஆனால் தமிழ் நாடோ? தமிழ் நாடே! நீ செய்த கரிசு என்னை? உன் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளே உனக்குப் பகையாகின்றனரே! உன்னைத் தாயென்று கொள்ளவும் மறுக்கின்றார்களே! உன்மேற் பிறர்வன்மைக்கும் இடனளிக்கின்றார்களே! இஃதென்ன கொடுமை? உன் வயிற்றிற் பிறந்து, உன் பாலுண்டு வளர்ந்து உன்னை அன்னையாகக்கொள்ள மயங்குவதும், மறுப்பதும் என்ன வியப்பு? தமிழ் நாடு; தமிழ்நாடு என வெற்றுரை புகலுவதனலும், அவ்வாறு கூறும் தலைவர்களின் வாய்ச் சொல்லையும் பந்தரையும் கேட்டும், பார்த்தும் முழக்கம் செய்வதனலும்—தமிழ் நாடு ஆண்டுப் பொலியாது. தமிழ்மொழியில் – அதன் கலைகளில் - தமிழ்நாடு ஆக்கமுறல் வேண்டும். உண்மையில் நந்தந் தாய்மொழியாகிய தமிழ் எந்நிலையுற்றிருக்கிறது? தமிழ்த்தாய் யாண்டு உறைகிறாள்? அரசு வீற்றிருக்கின்றாளா? மன்றங்களில் வாழ்கின்றாளா? கல்லூரிகளெனப்படும் நிலையங்களிலாதல் அவளைப் பார்க்கலாமா? உரிமைக்கு உழைப்பதாகச் சொல்லப்படும் அரசியல் கழகங்களி

உலக நாட்டினரின் பொது வாழ்நாள் மதிப்பீடு

	மக்கள்	வாழ் நாள்
1	நெதர்லாந்து மக்கள்	74 ஆண்டுகள்
2	சுவீடன் மக்கள்	73 ,,
3	தென்மார்க்கு மக்கள்	72 ,,
4	இசுரேல் மக்கள்	72 ,,
5	இங்கிலாந்து கூட்டரசு மக்கள்	71½ ,,
6	அமெரிக்க ஒன்றிய நாட்டு ,,	69½ ,,
7	ஆத்திரேலிய மக்கள்	69¼ ,,
8	கனடா மக்கள்	69 ,,
9	சப்பான் மக்கள்	68½ ,,
10	இத்தாலிய மக்கள்	68 ,,
11	தென் ஆப்பிரிக்கக் குடியரசு ,, (வெள்ளையர்)	67 ,,
12	போலந்து மக்கள்	65 ,,
13	இசுப்பானிய மக்கள் (Spain)	62 ,,
14	அர்சன்டைனு மக்கள்	59½ ,,
15	இலங்கை மக்கள்	59 ,,
16	பிரேசில் மக்கள்	53 ,,
17	பிலிப்பைன் மக்கள்	52 ,,
18	மெக்சிகோ மக்கள்	40 ,,
19	காங்கோ (ஆப்பிரிக்க) மக்கள்	38 ,,
20	இந்திய மக்கள்	38 ,,

(முன்பக்கத் தொடர்ச்சி)

லாதல் அவனைக் காணலாமா? தமிழ்த்தாளிகைகளிலாதல் அவனுக்கு இடமுண்டா? பல தாளிகைகள் தமிழ்த் தாயின் குழலை-கழுத்தை-இடையைக் கொய்யும் இரு வாளாகவும், அறுக்கும் கொடு வாளாகவும், அல்லவோ உலவுகின்றன? சுருங்கக் கூறின் தமிழ் மக்கள் தமிழ்மொழியைக் கொலைசெய்வதில் பேரும் புகழும் பெற்றவர்களென்றுகூறலாம். இவர்களாலேயே 'ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி' கவலுரு நிலையை நந்தாய் அடைந்திருக்கிறாள். இறுதியாக, தாய்மொழி வளராநாடு ஒருநாளும் உரிமை பெறாது தாய்மொழி நாட்டம் உரிமை நாட்டமாகும். உரிமைக்கு முதற் படி தாய்மொழியோம்பும் முயற்சி. தமிழ் நாட்டார் தாய்மொழி மீது கருத்துச் செலுத்துவாராக.

இதுவா திரைப்படம்?

மணிவேலன்

கொட்டாவி விட்டபடி கதைத்தலிவன்
குத்துக்கால் கட்டிலிலே உடலைச் சாய்த்துப்
பொட்டென்று கண்மூட, கதைத்தலிவி
பொசுக்கென்று 'கண்ணுடிச் சேலை' கட்டி
திட்டென்று நிலம்நடுங்கும் ஆட்டம்ஆடித்
தீந்தமிழை 'மிதிக்கின்ற' பாடல்பாடி
சட்டென்று காதலனின் கையைப் பற்றித்
தரதரெனச் சோலைக்கே இழுத்துச் செல்வாள்!

தோட்டத்தே வளர்ந்திருக்கும் மரங்கள் தம்மைத்
திபுதிபெனச் சுற்றுவதும்; புல்தரைமேல்
பாட்டையினைச் சமன்படுத்தும் உருளை போல
பரபரெனப் புரள்வதுவும் மீண்டெழுந்தே
ஆட்டுக்கல் சுற்றுகின்ற கையைப் போல
அத்தானை நூறுமுறை சுற்றி வந்து
காட்டுமரப் புளிகடித்த மந்தி போலக்
கையகலம் வாய்பிளந்து பல்லைக் காட்டி

'சேட்டைகள்' செய்வதுவும் ஆனகாட்சி
சிறுபருவம் முதல்பார்த்துச் சலித்து விட்டோம்!
பாட்டனுடன் பெயர்த்தியினை இணைப்புச் சேர்த்துப்
பலகதைகள் கருப்பொருளை அவியலாக்கி
ஓட்டைமிகு கதைபின்னித் திரைப்ப டங்கள்
ஒருநூறு பிடிக்கின்றார் பாழாய்ப்போக!
பாட்டென்றே உரைநடைக்குப் பண்ண மைத்துப்
பாடுகின்றார் செவியிரண்டும் செவிடாய்ப்போச்சு!

நாட்டினிலே கதையிலையோ? பாடல் செய்யும்
நல்லநல்ல பாவலர்கள் செத்தா போனார்?
கேட்டினைத்தான் செய்கின்றார்! நன்மை செய்து
கிழித்ததுவோ ஒன்றுமில்லை! கிழட்டுச் செக்கு
மாட்டினைப்போல் சுற்றுகின்றார்! புதுமை உண்டா?
மையஅர சினர்கொடுக்கும் பரிசை வாங்கும்
நாட்டந்தான் தமிழ்ப்படங்கள் பிடிப்பவர்க்கு
நல்லபடம் ஆயிரத்தில் கொன்றில் லையே!

அரசியல் நிலை

புலவர் தி. நா. அறிவுஒளி

நல்ல நோக்கோடு தொடங்கும் ஒரு செயலோ, கொள்கையோ அமைப்போ காலப் போக்கில் துன்பமோ தீமையோ விளைவிக்கவும் முற்பட்டுவிடும். மக்களின் அறியாமையும் தெளிவின்மையும் பண்பின்மையும் இதற்குக் காரணியங்களாம். இந்நிலைக்கு இரையான துறைகளுள் தற்கால அரசியலும் ஒன்றாகிவிட்டது; உலகின் 'தலைபாய துயரங்களுள்' இந்நிலைத்துயரும் ஒன்றும். அரசியலுக்கு அளவு கடந்த வல்லமையும் இடமும் மக்களினத்தால் வழங்கப்பட்டது மிகக் கொடுங் குற்றமாகவே தோன்றுகிறது. அரசியல் காப்பதைவிட அழிப்பதையும், இனிமையைவிட இன்னுமை நல்கியதையும் வரலாறு காட்ட அறிகிறோம். முன்னேறிய தற்கால அரசியலமைப்புகளும் குழப்பம், பூசல், புரட்சி, வெறி, அமைதியின்மை, துன்பம் ஒறுப்பு விளைவிப்பனவாய் மக்களை அச்சுறுத்தி இயங்கி வரக் காண்கிறோம். உலக நாடுகள் யாவையிலும் சிலர் பிடிக் காட்பட்ட அரசியல், எளியராய பலர் தலையுருட்டி வல்லாண்மை ஆட்டம் ஆடி அவல மெய்ப்பாட்டை விளைவிக்கக் காண்கிறோம். கயவரின் இன்ப மனையாகவும், நெறியற்றோரின் கொடும்பாசறையாகவும், இரண்டகச் சூழ்ச்சியாளரின் தீய கோட்டையாகவும் அரசியல் ஆகிவிட்டது. இவ்வுண்மையைச் சான்றோர் எடுத்துக் காட்டி இடித்துரைக்கவும் அஞ்சும் நிலை வளர்ந்து வருவதே வருங்கால நன்மை மீது நம்பகக் குறைவை நம் மனையோர்க்கு உண்டாக்குகிறது. வாழ்வின் ஒவ்வொரு கூறையும் நிலையையும் அரசியல் தாக்கிக் கட்டுப்படுத்தித் தன்பிடிக்கடிமைப் படுத்தும் நிலை இன்று வளர்வதை நல்லறிஞர் ஏற்க இசையார். இந்நிலை மறு ஆய்வுக்கு ஆட்படுத்தப் பெற்று அரசியலில் வல்லாண்மைப் போக்கின் விரிவைத் திட்டவட்டமாக அடக்கியாள வேண்டுவது இந்நூற்றாண்டு இன்னே செய்ய வேண்டிய இன்றியமையாத உயிர்க் கடமையாம்.

எந்த ஆட்சி மக்களிடமிருந்து வரிவாங்கி வாழ, உரிமை பெற்றுள்ளதோ; அவ்வாட்சியைப் பற்றித் திறனாய, தீர்ப்பளிக்க வரி செலுத்தும் நாட்டுக் குடிமக்களுக்கு வரைவற்ற உரிமையுண்டு. இந்நிலையில் ஏற்றத்தாழ்வோ, பாகுபாடோ, பிரிவு பிளவோ இல்லை. வரி கொடுக்கவும், ஆளவந்தோரை வாழ்த்திப் போற்றவும், ஆட்சி ஆட்டி வைத்தாங்கு ஆடி அலமரவும் மட்டுமே குடிமக்கள் இருக்க வேண்டும் என்றும், ஆட்சியின் குற்றங்குறைகளையோ, நெறி பிறழ்ந்த போக்குகளையோ, அறிவுக்கும் நேர்மைக்கும் அறத்துக்கும் இசையாத் தீவினைகளையோ எடுத்துக்காட்டி அறிவுறுத்த, மறுக்க, இடித்துரைக்க உரிமை இல்லையென்பதோ, அவ்வாறு செய்தல் நாட்டுக்கு எதிரான நடத்தையென்பதோ, அவ்வாறு ஓம்படையுணர்த்துவோர் 'நாட்டுப்பற்றில்லாதவர்' என்பதோ மடமை சான்றாகும். அறிவற்ற ஆராய்ச்சித் திறமற்ற மக்

கள் வேண்டுமானால் இக்கூற்றுக்கிசைந்து 'தாளம்'போடலாம்: ஏனையசான்றோர் இதற்கு எஞ்ஞான்றும் இசையார். மூளையும் ஆய்வியல்பும் உடையோர் அரசியல் பற்றியும், அதன் நிறை-குறை பற்றியும் கருத்துரை கூறியே திருவர்.

அரசியற்றலைவர், அதிகாரிகள் ஆகியோரைக் குருட்டுத் தன்மையாகப் போற்றிப் புகழ்பாடி, பாராட்டி வரவேற்றுத் 'தலையாட்டிப் பாவைகளாக' உழலவேண்டிய நிலைக்கு மக்களை இழிந்த நிலையிற்றள்ளியிருப்பதனைய கீழ்மை உலகில் வேறு எதுவுமின்று. பகுத்தறிவுக்கும் 'மாந்த உணர்வு'இயல்புக்கும் முற்றும் முரணான இந்நிலையை மாற்ற அறிஞர் குழு முயலுமாக. தன்னலத்துக்காகத், தற்குறித்தன்மைக்காக, ஒருவரைப் போற்றுவதோ, பாராட்டுவதோ, 'தூக்கி விடுவதோ இழிந்த கொடுங்கயமையாம். கட்சியரசியல் வெறிக்கூத்தாகவும், நரம்புகளுக்குக் கிளர்ச்சியூட்டுவதாகவும் அமைந்த கண்மூடி வழக்கம் மண்மூடிப்போக வேண்டும். அரசியலையும் சட்டங்களையும் அமைத்துக் கொள்ள அறியாப் பறவைகள், உயிரிகள் வாழ்விலுள்ள உவகை, உரிமை. ஆறுதல், ஒருமையியல்பு, 'அரசியலையும் சட்டங்களையும்'அறிவின் திறனால் படைத்துக் கொண்ட மக்கள் வாழ்வில் இல்லையெனின்; அது மக்களின் சீரிய குறைபாடன்றே? அரசியலும் சட்டமும் குறைபாடுடையவையும் நிலையான தன்மையிலாதவையும் ஆகும்.

அரசியல் தொடர்புடையார் தம் செல்வம் அதிகாரம் முதலிய வல்லமைகளால் எளியோரை வாட்டியும், ஆட்டிவைத்தும் தம் விழைவுப்படி இயக்கும் நிலை அரசியல் சீர்கேட்டுக்கு அடிப்படையாம். பெரும்பான்மையோர் நன்மைக்காக அமைக்கப்பட்டது அரசியல் என்று சொல்லப்படுகிறது. ஆயின், அஃது சிறுபான்மையோரின் சொக்கட்டானாகிவிட்டிருக்கும் சிறுமை பேரவல நிலையினதாம். இந்நிலையினை உலகோர் மாற்றியமைக்க முனைய வேண்டும். அரசியலார் தாம் புரியும் அட்டூழியங்களைத் தாமே ஒப்புக்கொள்ளாது மறுத்துவிட்டால் அஃது குற்றமாகாமல் நேரிதாகிவிடும் என நம்பிப் பேசிச் செயல்படுகின்றனர்! என்னே அறியாமை! உண்மை என்பது ஒரிருவர் ஒப்புக்கொள்ளாததாலேயே பொய்த்துப் போய்விடுமோ? ஒரிருவருக்காகவா உண்மையும், அறமும் ஒழிந்துபோய்விடும்? இல்லை. அரசியல், தன் குற்றங்களை நீக்கிக் கழுவாய்தேடமுயலவேண்டுமே தவிரத்தன் குறையை நிறையெனக் காட்ட முயல்வதும் விடாப்பிடியாக வெறியோடு மக்களைத் தம்பாற்படுத்த முனைவதும் வீணே. மக்களின் பணியாளரே அரசியல் தொடர்பினர். இவ்வுண்மையைக் குடிமக்கள் தெளிவாக உணரவேண்டும். குடியாட்சியில் 'தலைவர்' என்ற சொல்லும் தன்மையும் அறிவற்ற வேண்டா மரபேயாகும். அரசியலாளன் மற்ற மக்களைவிட உயர்ந்தவனல்லன்! அரசியலாளர் தலைகால் புரியாமல் இயங்கும் வெறிப்பைத் தணிக்க வேண்டு

மாயின், மக்கள் அவர்களுக்கு அறியாமல் செய்யும் சிறப்பும் முதன்மையும் குறைய, மறைய வேண்டும். மக்கள் தம் கடும் உழைப்பால் ஈட்டும் பொருளை அரசியல் கட்சிகளுக்குக் கொடுத்தல் முற்றும் விலக்கப்படவேண்டும்.

ஆட்சிமுறை தாயின் வாழ்க்கையைப் போன்றிருக்க வேண்டும். தாயின் துறவுத் தொண்டும், தன்னலமறுப்பியல்பும் ஆட்சிக்கு அமையவேண்டும். குழந்தைகளைத் திருத்தவே தாய் கடிவாள்; அதுபோலவே நல்லாட்சி மக்கள் அறியாமையை நயமாக மாற்ற வேண்டும். நல்ல அரசியல் அறிவு அனைத்துலக மக்களுக்கும் சான்றோரால் சீரிய முறையில் அறிவுறுத்தப்பட வேண்டும். தெளிந்த அரசியல் எண்ணங்கள் தடையற்று உலவ, ஆராயப்பட மக்களுக்கு உரிமை வேண்டும். அரசியல் மலர்ச்சிக் கருத்துகள் மக்களால் உடனுக்குடன் உணர்ந்து தெளியும் பண்பாட்டு நிலையை அடைய ஆட்சியும், அறிஞரும் ஒத்துழைக்கவேண்டும். வளரும் வரலாற்றியக்கத்தைத் தடை செய்யாத அரசியல்தான் மக்களினத்தை வாழ்வித்து வளரச்செய்யும்.

தென்மொழி, கடலூர்—1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இருவண்ணம்)	100 உருபா
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப் பக்கம்		50 உருபா
,, அரைப் பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஒரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக் கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.